www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 15 ஆகஸ்ட் '89
4-18
விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



# பீரங்கிக் கொள்ளை நிரூபணம்: அலறுகிறது

## ராஜீவ் கும்பல்!

படிப்பகம்

www.padippakam.com

# சீருடை தரித்த ரௌடிகளின் அட்டூழியம்



நாட்டு மக்களை பீதிக்குள்ளாக்கும் அதிர்ச்சியான நிகழ்ச்சியொன்று அண்மையில் நடந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பிகானீர் மாவட்டத்திலுள்ளது லால்கார் ரயில் நிலையம். இதன் அருகே இந்திய ராணுவத்தின் பாசறையும் பயிற்சி முகாமும் உள்ளது. கடந்த ஜூலை 4-ம் தேதியன்று இரவு 9 மணியளவில் சில இராணுவ ஜவான்கள் லால்கார் - அம்பாலா பாசஞ்சர் ரயிலில் பயணம் செய்ய உடனடியாக ரிசர்வேஷன் ஏற்பாடு செய்து தரும்படி, ரயில் நிலையத்திலுள்ள ராணுவ போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரியிடம் கோரிய போது, அவர் இயலாது என மறுத்ததையொட்டி அவர்களிடையே வாக்குவாதம் நடந்தது. அவர்களை மறித்து சமரசம் செய்யப்போன ரயில்வே போலீசாரை இராணுவத்தினர் பெல்ட்டால் அடித்து விரட்டினர். குடிபோதையிலிருந்த அவர்களை அமைதிப்படுத்த முடியாததால் உள்ளூர் போலீசாரை உதவிக்கு அழைத்தனர். இதற்கிடையே ஒரு ஜவான் பாசறைக்குச் சென்று தகவல் தெரிவிக்கவும், 150க்கும் மேற்பட்ட சீருடை தரித்த ராணுவ வெறியர்கள் இரண்டு லாரிகளில் கையிலே இரும்புத்தடி, ஹாக்கிமட்டை, கோடாரி, நீண்ட கம்புகளுடன் வெறிக்கூச்சலிட்டபடியே வந்திறங்கினர்.

ரயில் நிலைய அதிகாரியின் அறையைச் சூறையாடி அவரைத் தாக்கியது ஒரு கும்பல். இன்னொரு கும்பல் டெலிபோன் மற்றும் இருப்புப் பாதை கட்டுப்பாட்டுக் கருவிகளை உடைத்தெறிந்து, ரயில்வே ஊழியர்கள் 12 பேரை இரும்புத் தடியால் தாக்கி இரத்த வெள்ளத்தில் மிதக்கவிட்டது. மற்றொரு கும்பல் ரயில்வே பிளாட்பாரத்திலிருந்த கடைகள், உணவு வண்டிகள், மின்விளக்குகள், விளம்பரப் பலகைகளை அடித்து நொறுக்கி கண்ணில் பட்டவர்களையெல்லாம் வெறிபிடித்து தாக்கியது. இன்னொரு கும்பல் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த பயணிகள் ரயிலைச் சூறையாடியது. பயணிகளை வெளியே இழுத்துப் போட்டு இரும்புத் தடியால் தாக்கியது. பீதியில் ரயில் பெட்டிக்கதவுகளைத் தாளிட்டுக் கொண்டும், கழிப்பறையில் பதுங்கிக் கொண்டும் இருந்த அப்பாவி மக்களைக்கூட வெளியே இழுத்துவந்து மிருகத்தனமாக தாக்கியது. மற்றுமொரு கும்பல் ரயில் நிலையத்தின் அருகிலிருந்த குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து அவர்களை கண்மூடித்தனமாக தாக்கியது. அங்கிருந்த கடைகளைச் சூறையாடி வாகனங்களை உடைத்தெறிந்தது. இன்னுமொரு கும்பல் ரயில்வே ரிசர்வ் போலீஸ் படையின் ஆயுத தளவாட கிடங்கினுள் புகுந்து துப்பாக்கிகளையும், குண்டுகளையும் பறித்துக் கொண்டு கண்மூடித்தனமாக சுட்டுக் கொண்டே ஓடியது. ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இந்த வெறியாட்டம் நடந்தது

மிருகத்தனமான இந்த ராணுவ வெறியாட்டத்தால் நூற்றுக் கணக்கானோர் படுகாயமுற்றனர். பத்துக்கும் மேற்பட்டோர் குற்றுயிரும் குலையுயிருமாக ரத்த வெள்ளத்தில் மூழ்கினர். பயணிகள் பெட்டியிலிருந்த ஒரு குழந்தை கண்ணை இழந்தது. பாசஞ்சர் ரயிலின் பொறுப்பு அதிகாரி(கார்டு)யின் கை, கால், விலா எலும்புகள் முறிந்து மருத்துவமனையில் கிடக்கிறார்.

இராணுவக் கும்பல் தனது மிருக வெறியாட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பிய இரண்டு மணி நேரம் கழித்துதான் உள்ளூர் போலீசு அங்கே வந்தது. ''உரிய நேரத்தில் வந்திருந்தால் ராணுவத்துக்கும் போலீசுக்குமிடையே மோதலும் ரத்தக்களறியும்தான் ஏற்பட்டிருக்கும். எனவே தான் தாமதமாக வந்தோம்'' என்றார் போலீஸ் உயரதிகாரி., அந்த அளவுக்கு கட்டுப்படுத்த முடியாத வெறிபிடித்த மிருகம்தான் இந்திய ராணுவம் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார். ராணுவக் கும்பலின் அட்டூழியங்களைக் கண்டித்து பகுதிவாழ் மக்களும் ரயில்வே ஊழியர்களும் ஒருநாள் கடையடைப்பு - வேலை நிறுத்தம் செய்த பிறகு மாநில உள்துறை அமைச்சர் இதுபற்றி ராணுவத்துறை அமைச்சகத்தக்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி கடிதம் எழுதிவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியளிக்க ஒப்புக்கொண்டார்.

இத்தனைக்கும் பிறகும் ராணுவத் தலைமையகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமது ரௌடித்தனத்தை நியாயப்படுத்தும் வகையில், பயணிகளும் ரயில்வே ஊழியர்களும் ராணுவத்தினரை அசிங்கமாகப் பேசி ஆத்திரமூட்டி தாக்கியதால், உணர்ச்சிவசப்பட்டு திருப்பித் தாக்கினர் என்று புதிய கதையை அவிழ்த்துவிட்டு கொக்கரிக்கிறது. சொந்த நாட்டு மக்களையே கடித்துக் குதறும் மிருகவெறி பிடித்த இந்திய ராணுவம்தான் ஈழ மக்களைக் காக்கிறதாம்; அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபடுகிறதாம்!

மூளையை முனியாண்டி விலாஸ் ஓட்டலுக்கு விற்றுவிட்ட சோவும், ஜெயகாந்தனும் எவ்வளவுதான் முயன்றாலும் இந்திய மிருகவெறி பிடித்த இராணுவத்தின் கோரமுகத்தை ஒருக்காலும் மறைத்துவிட முடியாது.

படியுங்கள்!

புதிய கலாச்சாரம்

ஆகஸ்ட் - அக்டோபர் '89 இதழில்...

- சீனா: ஒரு !ுற்று நோயின் வரலாறு
- இந்தியாவின் நவீன பாதுஷாக்கள்

—சிறப்புக் கட்டுரைகள் மற்றும் கவிதைகள்.

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

**18**

1 - 15 ஆகஸ்ட் '89

உள்நாடு
தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $ //



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# எதிர்க்கட்சிகள் ராஜினாமா: அரசியல் திருப்புமுனை!

நாடாளுமன்றத்தின் மக்களவையில் இருந்து 12 எதிர்க்கட்சிகளின் 106 உறுப்பினர்கள் எ.ம.பி. பதவிகளை ராஜினாமா செய்துவிட்டனர். நாட்டின் நாடாளுமன்ற அரசியலில் நிச்சயம் இது ஒரு புதிய திருப்புமுனை. 14 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது பாசிச இந்திரா கும்பல் அவசரநிலை ஆட்சியைப் பிரகடனம் செய்தபோது நிலவிய அரசியல் நெருக்கடி நிலைமை மீண்டும் உருவாகியுள்ளது. ''தலைமைத் தணிக்கையாளரால் நிரூபிக்கப்பட்ட லஞ்ச ஊழல் புரிந்த இந்த அரசு அரசியல் ரீதியிலும் தார்மீக ரீதியிலும் நீடிக்கத் தகுதியற்றது. இந்த அரசை நீக்கமுடியாத அளவு மிருகத்தனமான பெரும்பான்மையைக் கொண்ட இந்த மக்களவை கூச்சல் மட்டுமே போடக்கூடிய செல்லாக்காசாகி விட்டது. எனவே இதிலிருந்து விலகி மீண்டும் மக்களிடம் நியாயம் கேட்கப் போகிறோம்'' என்று புறப்பட்டு விட்டன எதிர்க்கட்சிகள். பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சியில் நீடிப்பதற்குத் தகுதியற்றது என்று எப்போதோ தீர்மானித்திருக்க வேண்டும். அதற்கான காரணங்கள் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் தவிர எவ்வளவோ இருக்கின்றன. ✱ இந்திரா கொலையைத் தொடர்ந்து டில்லி மற்றும் பல வடஇந்திய நகரங்களில் ஆயிரக்கணக்கான சீக்கியர்களைப் படுகொலை செய்தது. ✱ போபால் விஷவாயுப் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளைத் தப்புவித்து, தண்டிக்கத் தவறியதோடு, அந்தப் பன்னாட்டு பகாசுரக் கம்பெனியுடன் துரோக ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. ✱ சாதி, மத, இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டு, இராணுவம் - போலீசை ஏவி அப்பாவி மக்களைப் படுகொலை செய்கிறது. ✱ பயங்கரவாதத் தடைச்சட்டம், தனிக்கோர்ட் சட்டம், அவசர நிலைப் பிரகடனத் திருத்தச்சட்டம், அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம் போன்ற பல கருப்புச் சட்டங்களாலேயே ஆட்சி நடத்துகிறது. ✱ அண்டை நாடுகள் மீது ஆக்கிரமிப்பு செய்து பிராந்திய ஆதிக்க - விரிவாக்க கொள்கைகளைப் பின்பற்றுகிறது. ✱ இந்திரா கொலைக்கும் காரணமான குற்றவாளிகளைத் தண்டிக்காது, தாக்கர் கமிஷன் அறிக்கை போன்ற இரகசியங்களை மூடிமறைத்து, நிரபராதிகளான சீக்கியர்கள் மீது சதிவழக்குகள் போட்டு பழிவாங்குகிறது. ✱ பத்திரிக்கைச் சுதந்திரம் உட்பட ஜனநாயக உரிமைகளை மறுத்து அடக்கி ஒடுக்கும் அதே சமயம் அரசு ஏகபோக பிரச்சாரச் சாதனங்களை வைத்து புளுகித்தள்ளுகிறது.

இப்படிப்பட்ட பல பிரச்சினைகள் மீது மறைமுக ஆதரவு அல்லது பெயரளவுக்கேயான எதிர்ப்பை மட்டும் எதிர்க்கட்சிகள் காட்டுகின்றன. இப்போது அவர்கள் முதன்மைப்படுத்தும் லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடு என்பதும் முக்கியமான விவகாரம்தான். சொந்த நாட்டைச் சூறையாடி வெளிநாடுகளில் குவிக்கும் தேசவிரோதச் செயல்தான். ஆனால் இப்போது லஞ்ச ஊழல் என்பது விதிவிலக்கான விவகாரமாக இல்லை. சர்வ வியாபகமானதாக எங்கும் நிறைந்திருக்கிறது. சுவீடன் பீரங்கி, ஜெர்மானிய நீர்மூழ்கி, இங்கிலாந்து ஹெலிகாப்டர் ஆகிய பேரங்களில் பிரதமர் ராஜீவ் சிக்கிக் கொண்டுள்ளார் என்றால் தாவர எண்ணெய் ஆலை - நில ஆக்கிரமிப்பு போன்ற ஊழல்களில் போலீசு மந்திரி பூடாசிங், தீவன இயந்திர வரி ஊழலில் சபாநாயகர் இப்படி மத்திய - மாநில ஆட்சியில் உள்ள எல்லாத் தலைவர்களும் சிக்கியுள்ளனர். லஞ்ச ஊழலைப் பற்றி இவ்வளவு கூச்சல் போடும் என்.டி.ராமராவ், தேவிலால், ஹெக்டே, ஜோதிபாசு போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இதே கதைதான்.

இருந்த போதும் மற்ற விவகாரங்களை விட்டுவிட்டு லஞ்ச ஊழலை மட்டும் எதிர்க்கட்சிகள் பெரிதுபடுத்துவதற்கு என்ன காரணம்? ''நாடாளுமன்ற ஆட்சிமுறை - அரசியல் அமைப்பின் மீதே மக்கள் நம்பிக்கையற்றுப் போய்விடுவார்கள், தனிமனிதத் தவறுகள் மட்டுமே நடக்கின்றன; அவற்றைச் சரிசெய்து விடமுடியும்'' என்று மக்களை நம்பவைத்து ஓட்டுப்பொறுக்குவதற்கு மட்டுமே தயாராய் உள்ளார்கள். ஆனால் நாடாளுமன்ற வாதப் பிரதிவாத, வாய்ச்சவடால் முறையைக் கைவிட்டு சாலையோர அரசியல் சண்டையில் இவர்கள் இறங்கியிருப்பதே நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முறை தோற்றுப் போனதைத்தான் குறிக்கிறது. உச்ச நீதிமன்றம், நாடாளுமன்றம் போன்ற எந்தவொரு ஜனநாயக அமைப்புகளினாலும் லஞ்ச ஊழல் புரியும் அரசுக் கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியவில்லை.


பதவியை - அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போவார்கள். ''ஏற்கனவே குடியரசுத் தலைவர், சபாநாயகர், ஆளுநர், நாடாளுமன்றம், உச்ச நீதிமன்றம், தேர்தல் கமிஷன், விசாரணைக் கமிஷன் போன்ற ஜனநாயக நிறுவனங்களை சிதைத்தவர்கள். இப்போது இராணுவம், தற்காப்பு, தலைமைத் தணிக்கையாளர் ஆகிய நிறுவனங்களையும் சிதைக்கிறார்கள்'' என்று எதிர்க்கட்சிகளே கூறுகின்றன. அதேசமயம் தேர்தல் தில்லுமுல்லுகளுக்கான முயற்சிகளுக்கு எதிராக விழிப்பாய் இருக்கும்படி எச்சரிப்பதோடு, நாடாளுமன்ற அரசியல் அமைப்புக்குள்ளேயே பாசிச ராஜீவ் கும்பலை முறியடித்து விடமுடியும் என்கிற பிரமைகளை உருவாக்குகிறார்கள்.

போலிக் கம்யூனிஸ்டுகளை விலைபேசி எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்துவது என்கிற அரசியல் தந்திரம் முதல், இத்தகைய நெருக்கடியைச் சமாளிப்பதற்கு பாசிச இந்திரா கும்பல் செய்ததைப் போல அவசர நிலை பாசிச ஆட்சியை பகிரங்கமாகவே நிறுவுவதற்கும் தயங்காது. இலங்கை, நேபாளம் போன்ற அண்டை நாடுகளுக்கெதிரான தேசிய வெறியையும் இதற்குப் பயன்படுத்தும் ஆனால் பகிரங்கமாக அறிவிக்காத பாசிச ஆட்சியை நடத்துவதற்கு ஏற்ற வகையில் சட்டபூர்வமாகவும் நிறுவன பூர்வமாகவும் தனது பாசிச இயந்திரத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளது.

ஆகவே, ஆளும் வர்க்கத்தின் இருவேறு பிரிவுகளும் நாடாளுமன்ற வரம்புக்கு அப்பாற்பட்ட, பகிரங்கமான அரசியல் மோதலில் இறங்குவது தவிர்க்க முடியாது. இந்தச் சாதகமான அரசியல் நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பாசிச எதிர்ப்பு போராட்டங்கள் மூலம் பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட வேண்டியது புரட்சிகர இயக்கங்களின் கடமையாகிறது.

படிப்பகம்

www.padippakam.com




## பீரங்கிக் கொள்ளை நிரூபணம்:

# ஆட்டங் காணுகிறது நாற்காலி! அலறுகிறது ராஜீவ் கும்பல்!

ராஜீவின் அண்டப்புளுகு ஒவ்வொன்றும் பொய்க்கால் பொருத்திக் கொண்டு நகர்வலம் வருவதற்குள் அதற்கெதிரான உண்மைகள் ஆரவரமாக மேடையேறி விடுகிறது. இந்த முறையில் இப்போது ராஜீவை முட்டுச் சந்தில் நிறுத்தியுள்ளது தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் (Comptroller and Auditor General) அறிக்கை. நாட்டின் வரவு - செலவுகளை தணிக்கை செய்யும் அரசியல் சட்டத்தின் உச்சமட்ட அதிகார அமைப்பான இது போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் ராஜீவ் அரசின் கிரிமினல் குற்றங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. ராஜீவின் கழுத்தில் கிரிமினல் குற்றவாளி, அண்டப்புளுகன் என்று அட்டையை தொங்கவிட்டு மக்கள் மன்றத்தின் முன் இழுந்து வந்துள்ளது.

★ 2,036 கோடி ரூபாய் பெறுமானமுள்ள போஃபர்ஸ் பீரங்கி ஆயுத தளவாட வர்த்தக ஒப்பந்தத்தில் "பல தவறுகள்" (மோசடிகள்) நடந்துள்ளது.

★ "1986-ம் ஆண்டு மார்ச் 24ந் தேதி பிரதமரின் அலுவலகம் அனுமதி (போஃபர்ஸ் பீரங்கி பேரத்திற்கு) வழங்குவதாகத் தெரிவித்தது. மேலும் மதிப்பீட்டு முறை தொடர்பான சில ஆணைகளை பிரதமர் தெரிவித்துள்ளார். அவைகள் தனியாகத் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அந்த ஆணைகளுக்காகக் காத்திராமல் போஃபர்ஸ் நிறுவனத்துடன் அதே நாளில் 1986 மார்ச்சு 24ந் தேதி ரூ.1,437.72 கோடிக்கு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது".

★ "மிக மோசமான நிலைமையில் பீரங்கிகளை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பு கூறிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை"

★ "1982 டிசம்பர் முதல் 1985 அக்டோபர் வரை பிரெஞ்சு பீரங்கிகளை வாங்க (சோஃப்மா பீரங்கிகள்) ராணுவத் தலைமையகம் ஆலோசனை கூறிய போதிலும், 1986 பிப்ரவரியில் தன் நிலையை அது மாற்றிக் கொண்டு ஸ்வீடன் பீரங்கிகளை வாங்க சிபாரிசு செய்துள்ளது. இந்த திடீர் மாற்றத்துக்குச் சரியான காரணம் கூறப்படவில்லை"

★ "கமிஷன் பெறும் தரகர்களை நியமிக்காதிருக்க போஃபர்ஸ் நிறுவனத்திடமிருந்து எழுத்து மூலமாக உறுதிமொழி பெறப்படவில்லை"

★ "328 ரூபாய்க்கு தரமற்றவைகள் என்று தெரிந்திருந்தே வெடி மருந்துகள் வாங்கப்பட்டுள்ளது"

★ "வெளிநாடுகளிலுள்ள மூன்று கம்பெனிகளுக்கு ஏறத்தாழ ரூ.74 கோடி அளவுக்கு போஃபர்ஸ் நிறுவனம் கமிஷன் கொடுத்துள்ளது. இந்த உண்மையை கூட்டு நாடாளுமன்றக் குழு (காங்கிரசு நியமித்த சக்கரானந் தலைமையிலான குழு) ஒப்புக் கொண்டுள்ளது. ஏஜெண்டுகளை நியமிப்பதைத் தடை செய்யும் ஷரத்து, ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாததால் வழங்கப்பட்ட கமிஷன் தொகை அளவுக்கு பீரங்கிகள் விலையைக் குறைப்பதற்கு ஸ்வீடன் நிறுவனத்திடம் அரசு கோர முடியவில்லை"

★ "'86 ஆம் ஆண்டில் பாகிஸ்தான், பீரங்கி வெடி நெருப்பைக் கண்டறிந்து பீரங்கியைத் தாக்கி அழிக்கும் அதிநவீன ராடாரை (Fire Finder Radar) புதிதாக வாங்கியது. இதை சமாளிக்க, பாதுகாப்புத் துறை சோஃப்மா பீரங்கிக்குக்கு பதில் போஃ பர்ஸ் பீரங்கியை சிபாரிசு செய்தது என அரசு கூறும் காரணம் வியப்பளிக்கிறது. '85 ஆம் ஆண்டே பாகிஸ்தான் இந்த ராடார் சாதனம் வைத்திருப்பது பாதுகாப்பு அமைச்சகத்தின் கவனத்துக்கு வந்தது! அதைப்பற்றி பாதுகாப்பு அமைச்சகம் தன் கருத்தை மாற்றவில்லை. அப்போதும் சோஃபமா பீரங்கியையே சிறந்தது என ஆலோசனை கூறியது"

★ "ஒரு விசைக்கு 11 குண்டுகள் வெளித்தள்ளும் பீரங்கியின் தரசோதனைக்கு சம்மதித்து, 8 குண்டுகள் வெளிதள்ளும் வடிமைப்பு மட்டுமே தர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. 300 ரவுண்டுகள் சுடக்கூடியதாக கூறப்பட்டு, உயர் அழுத்த உஷ்ண நிலையில் ஒரு சில ரவுண்டுகள் மட்டுமே வெடித்து சோதித்தறியப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் பல்வேறு பருவ காலங்களில் சோதித்தறியும் நியதிக்கு மாறாக, குளிர் காலத்தில் துவங்கி ஜூலை மாதம் வரையில் மட்டுமே தர சோதனை செய்யப்பட்டது."

★ "பயன்படுத்தும் குண்டுகள், இழுத்துச் செல்லும் 'ட்ராலி'கள் ஆகியவைகளை

படிப்பகம்

www.padippakam.com

வெளியிடங்களில் வாங்கி இணைத்து பயன் படுத்தும் போ∴பர்ஸ் பீரங்கிகளின் சுடு தூரத்தைவிட ஒருங்கே கிடைக்கும் சோ∴ப்மா பீரங்கிகளின் சுடு தூரம் அதிகம். (போ∴பர்ஸ் பீரங்கி P - 0.5 கிலோ மீட்டர், சோ∴ப்மா பீரங்கி P + 2.5 கி.மீ)

★ "உயிராதாரமான விசயமான குறிப்பிட்ட காலத்திற்குள் பீரங்கிகளை சப்ளை செய்ய போ∴பர்ஸ் நிறுவனம் தவறியிருக்கிறது. இந்த காலநீட்டிப்பு 11 லிருந்து 44 மாதங்கள். இது நம்முடைய ராணுவத்தின் நடவடிக்கைத் திறனையே முடக்குவதாக உள்ளது.

★ "சீல் வைத்து வந்திறங்கும் வெடிமருந்து தோட்டாக்கள் அடங்கிய பெட்டிகளை உடனடியாக உடைத்துப் பார்க்க இந்திய அரசுக்கு அனுமதியில்லை. பயன்படுத்தும் போது களத்தில் மட்டுமே அப்பெட்டிகளை உடைக்க வேண்டும். தோட்டாக்கள் என்று வெறும் பெட்டிகள் கூட வந்திறங்கியிருக்கிறது. இதை உறுதிப்படுத்தி பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சகத்துக்கு யனுப்பியிருக்கின்றனர்.

∴ இன்னும், அந்நியச் செலாவணி விரயம், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை போ∴பர்ஸ் நிறுவனம் மீறியதால் ஏற்பட்ட இழப்பு, முன்தொகை மற்றும் குறைவான கடன் சலுகை, வடிவமைப்பு உரிமத்தை ஏற்றுக் கொள்ளப்பட்ட கால அளவுக்குள் பயன் படுத்த தவறியது - இவற்றால் இந்திய அரசுக்கு மேலும் கூடுதலாக 200 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

"இரண்டாம் தரமானது" என்று பாதுகாப்பு அமைச்சகத்தால் கூறப்பட்ட போ∴பர்ஸ் பீரங்கிகளை வாங்குவதற்கு தேவையற்ற அவசரம், விதிகளில் குளறுபடிகள் ஆகியன நடந்துள்ளது. தரத்தைப்பற்றியான முன்னெச்சரிக்கை கடை பிடிக்கப்படவில்லை. ஒப்பந்தத்தின் விதிகள் மீறப்படுமானால் அதற்கெதிரான பாதுகாப்பு விதிமுறைகள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

★ ☆ ★

கடந்த ஏப்ரல் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையை மரபையும் மீறி பட்ஜெட் கூட்டத் தொடரில் வைக்க மறுத்தது, ராஜீவ் கிரிமினல் கும்பல். "தலைமை தணிக்கை அறிக்கையை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்ற எந்த கட்டாயமும் அரசியல் சட்டத்தில் இல்லை" என்று திமிர்தனமாக கூறியது. ஓட்டுப் பொறுக்கும் நிர்ப்பந்தத்திற்காக, பழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு கண்துடைப்புக்காக கடைசி நேரத்தில் காட்டிவிட்டு மறைத்துவிட எத்தனித்தது, பாசிச ராஜீவ் கும்பல்.

வரும் பொதுத் தேர்தலுக்கு முன்பாக கடைசி கூட்டத்தொடராக கருதப்படும் தற்போதைய தருணத்திற்காக காத்திருந்தது. கூட்டத்தொடர் முடிவதற்கு குறுகிய காலமே, 15 நாட்கள் மட்டுமே இருக்கும் இத்தருணத்தில், ஜுலை மாதம் 18ந் தேதி, பாராளுமன்றத்தின் அலுவலக நேரம் முடிவடையும் மாலை 5.30 மணிக்கு இந்த அறிக்கையை சதி முறையில் பாராளுமன்றத்தின்



சதுர்வேதி.

முன் சமர்பித்தது ராஜீவ் கும்பல். உறுப்பினர்களுக்கு போதுமான பிரதிகள் கூட வழங்க மறுத்தது. 2 மணி நேரத்தில், இந்த அறிக்கைக்கு எதிராக, வக்கிரமான வசவுகள் நிறைந்த எதிர் அறிக்கை காங்கிரசு கும்பலால் சுற்றுக்கு விடப்பட்டது. "தணிக்கை அதிகாரியின் அறிக்கை பாரபட்சமானது; அரைகுறையானது; தவறான எண்ணத்தை ஏற்படுத்துவது." "...இந்த அறிக்கையைப் படித்த பின்னர் தலைமை தணிக்கை அமைப்பின் மீதான நம்பிக்கை கேள்விக்குறியதாகி விட்டது." "...தணிக்கை அலுவலர்கள் அனைவரும் மதிப்பிற்குரிய ஊழியர்கள் தான். ஆனால் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான ஆயுதங்களைத் தேர்வு செய்யும் திறமை தங்களுக்கு இருப்பதாக அவர்கள் கருத முடியாது" என்று ஜன்னி கண்டு உளறியது, காங்கிரசுக் கும்பல். இ.காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் கைசாத்திட்டிருந்த கும்பலில் பெரும்பாலோர், போ∴பர்ஸ் பேரம் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்ற கூட்டுக் கமிட்டியில் (ஜே.பி.சி) உறுப்பினர்களாக இருந்த காங்கிரசின் ஊது குழல்கள்! 20 பக்கங்களைப் படிப்பதற்கே நேரம் போதாத அந்த 2 மணி நேரத்தில், அந்த அறிக்கையின் சகல பகுதிகளையும் நுணுக்கமாகச் சாடித் தீர்த்து அறிக்கை தயாரித்திருந்தது, காங்கிரசுக் கும்பல். அதாவது, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்பே சட்டவிரோதமாக காங்கிரசு கும்பலின் கையில் அந்த அறிக்கை சென்றிருக்கிறது!

"போ∴பர்ஸ் பீரங்கி பேரம் தொடர்பாகவும், பீரங்கியின் விலை, சுடும் திறன் பற்றியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாங்கள் தெரிவித்த சந்தேகங்களும், குற்றச் சாட்டுகளும் நியாயமானவையே என்று தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை உறுதிப்படுத்துகிறது... அதேபோல் அரசு அளித்த பல தகவல்கள் உண்மைக்கு முரணானவை என்பதையும் தணிக்கை அறிக்கை வெளிக் கொணர்ந்துள்ளது... நாடாளுமன்றத்துக்குத் தவறான தகவல்கள் தருவதுதான் ஜனநாயகத்தில் மிகவும் கடுமையான குற்றம் என்பதால், அதைச் செய்த ராஜீவ் உடனடியாகப் பதவியைவிட்டு இறங்க வேண்டும்" என்று எதிர்க்கட்சிகள் உறுதியாக இருந்தன. "...தணிக்கை அறிக்கையை உடனடியாகவும், முழுமையாகவும் விவாதிக்க தயாராக இருப்பதாக" பசப்பியது வெட்கங்கெட்ட காங்கிரசுக் கட்சி. "தணிக்கைத் துறை உச்ச அமைப்பு; அது வழங்கியிருப்பது அறிக்கை அல்ல தீர்ப்பு; எனவே அதன் மீது விவாதம் தேவையில்லை. நடவடிக்கை தான் வேண்டும்" என்று எதிர்கட்சியினர் காங்கிரசைக் கொக்கி போட்டனர். "விவாதம் ஏன்? பிரிட்டனின் காமன்ஸ் சபையில் இப்படித்தான் மேல் மட்ட விபச்சாரியின் கள்ளத்தொடர்பு அம்பலமானதும் ஜான் புரொபியூம் என்ற அமைச்சர் பதவி விலக நேர்ந்தது. ஜப்பானிலும் தற்போது அதுதான் நடந்துள்ளது. எனவே ராஜீவ் உடனடியாக பதவி விலக வேண்டும்" என்று "ஜனநாயக" முன்னுதாரணங்களைப் போட்டனர், எதிர்க் கட்சியினர். இதனால், "உணர்ச்சிவசப்பட்டு கோபமடைந்த" ஆளும் காங்கிரசு கட்சி உறுப்பினர்கள், எதிர்கட்சினரை அடிக்க ஓடிவந்தனர். ரமேஷ் வர்நிக்ரா, டி.என்.பஷீர் போன்ற தங்களது சகபாடிகளை காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் "சமாதானப்"படுத்தி உட்கார வைத்தனர்.

"ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையைப் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க் கட்சிகளுக்கு தயக்கமில்லை. முடிவில் அது பற்றி வாக்கெடுப்பு நடந்து ஆளுங்கட்சியின் அதிக உறுப்பினர் எண்ணிக்கையால் நிராகரிக்கப்பட்டுவிடும். ஒரு மிகப்பெரிய ஊழல் பற்றிய அறிக்கையின் சாராம்சம் அடிப்பட்டு போய்விடும் என்பதாலேயே ராஜிநாமாவை வற்புறுத்துவதாக" எதிர்க் கட்சிகள் தெளிவு படுத்தின. கர்நாடக ஆட்சிக் கவிழ்ப்பு, போ∴பர்ஸ் பேர விவாதம் எதுவென்றாலும் "பேச அனுமதி கிடையாது" என்று முழங்கிய சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் இன்று ஈர்க்கிறார் "எதை வேண்டுமானாலும், கேட்க உங்களுக்கு உரிமையிருக்கிறது... இந்த அறிக்கை மீது விவாதம் நடத்த நான் அனுமதி தருகிறேன்... "நாட்டின் உச்சமட்ட அமைப்பு இது" என்று புலம்பினார்.

ராஜீவ் ராஜினாமா அறிவிப்பு வரும் வரை நாடாளுமன்றம், மாநிலங்கள் அவை இரண்டின் நடவடிக்கைகளையும் "செயலிழக்க" வைக்கும் வியூகம் வகுத்தன, எதிர்க் கட்சிகள். மூன்று நாட்கள் நாடாளுமன்றத்தின் பக்கமே திரும்பாமல் தலைமறைவாகி விட்ட ராஜீவை நாடாளுமன்றத்தில் உடனே ஒப்படைக்கக் கோரினர். "முதலில் அந்த குற்றவாளியை கொண்டுவாருங்கள்", "நாட்டின் தலைமையையே மூன்று நாளாக காணவில்லை. முதலில் அவரிடம் இங்கு வரச் சொல்லுங்கள். பிறகு விவாதிக்கலாம்

"தயவு செய்து சொல்லுங்கள், அவர் எங்கிருக்கிறார்?" என்று ஊளையிட்ட காங்கிரசாரின் மீது கரியைப் பூசினார்கள், எதிர்க்கட்சியினர். அவசியப் பண்டங்கள் போதுமான அளவு சப்ளை செய்யப்படாதது குறித்து கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை விவாதிக்காமல் "அரசை பதவி விலக வேண்டும் என்று கோருவதன் மூலம் உங்கள் மக்கள் பட்டினியாகக் கிடப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா" என்று மாநிலங்கள் அவையில், உளறினார், அவை தலைமையை யேற்றிருந்த திருமதி நஜ்மா ஹெப்துல்லா! இரு அவைகளிலும் தலைவர்களாக இருந்த, பல்ராம் ஜாக்கரும், சங்கர் தயாள் சர்மாவும் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல்,

www.padippakam.com

அவையை ஒத்திவைத்துவிட்டு அடிக்கடி ஓடிப் போனார்கள். ஒரே நாளில் 7 முறை 10 முறை என்று இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கு புறமுதுகு காட்டிய ராஜீவ் காந்தி அதே நாட்களில் காங்கிரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு, வீரவசனம் பேசினார். ''பாரதீய ஜனதாவும், ஜனதா தளமும் குறுகிய அரசியல் லாபங்களுக்காக இணைந்து செயல்படுகின்றன, இன்றைய எதிர்க்கட்சிகளின் அரசியல் தரம் எவ்வளவு தாழ்ந்துவிட்டது என்பதை இது காட்டுகிறது... ஆனால் அவர்களுடன் கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து கொள்வது ஆச்சரியமளிக்கிறது... அவர்களின் கண்ணில் தெரிவது, நாற்காலி ஒன்று தான்; வருங்கால இந்தியா அல்ல. பஞ்சாப் பயங்கரவாதம்... அக்னி ஏவுகணை... நிதிநிலமை... பேநஸீருடன் பேசியது. உலக ஒற்றுமை...'' இப்படி பேய், பூதம் கதைச் சொல்லி குழந்தைகளை குஷிப்படுத்துவது போல், காங்கிரசுக் காரர்களைத் தேற்றினார்.

காங்கிரசு கிறுக்குகளும் உற்சாக மிகுதியில் உளர ஆரம்பித்தன. தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டியிருப்பது ''...நடைமுறை பற்றியும், வேறு அம்சங்கள் பற்றியுமான குறைபாடுகள் தானே தவிர ஊழல் செய்திருப்பதாக அதில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை'' என்று என்.கே.பி.சால்வே என்ற காங்கிரசுக் கட்சியில் துணைத் தலைவர் பதவிவகிக்கும் கிழநரி மாநிலங்கள் அவையில் ஊளையிட்டது. ''தணிக்கை அறிக்கையில் முதிர்ச்சியும் இல்லை. விஷயமும் இல்லை. அரசின் கொள்கை(?) குறித்துத் தீர்ப்பு வழங்கத் தணிக்கை அறிக்கைக்கு உரிமையில்லை... ஸ்வீடனுக்குப் போக (விசாரணை என்ற பெயரில் ஊர் சுற்ற) தமக்கு அனுமதி தருமாறு அரசைக் கேட்டதன் மூலம் தணிக்கைத் தொழிலுக்கே மிகப் பெரிய களங்கம் ஏற்படுத்திவிட்டார்'' என்று பரிச்சித்தார். நாடாளுமன்ற விவகார அமைச்சராயிருக்கும் எச்.கே.எல்.பகத் என்ற இன்னொரு கிழநரி''... மற்ற அமைப்புக்களைக் காட்டிலும், அதிக அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் எதைப்பற்றியும் விவாதிக்கலாம். பிரச்சனை தொடர்பான விவாதத்திலிருந்து தப்பித்துக் கொள்ள காங்கிரசுக் கட்சி விரும்பவில்லை... தேர்தலில் இ.காங்கிரசு மிகப்பெரிய வெற்றி பெறும்...'' என்று சப்புக் கொட்டியது. மீண்டும் 12 காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி எதிர்க்கட்சிகளைச் சாடி அறிக்கை தயாரித்தனர்.

''எதிர்க்கட்சிகள் கையாளும் நடைமுறை பாராளுமன்றத்தை செயலிழக்க வைப்பது; கண்டனத்துக்குரியது; பொருத்தமற்றது; அரசியல் நீதிக்கு மாறானது'' என்று சபித்தனர். இதற்கிடையே தனது மௌனத்தை கலைத்த உச்சமட்ட தணிக்கை அதிகாரி சதுர்வேதி, தன்னைப்பற்றியான காங்கிராசரின் அண்டப்புளுகுகளுக்கு பதிலடி கொடுத்தார். ''தலைமைக் கணக்கு தணிக்கை அலுவலகம் பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து தாக்கி பேசி வருவதால் இரு அவைகளிலும் அன்றாடம் என்ன பேசப்பட்டது என்பதை ஒரு வார்த்தைக் கூட விடாமல் தமக்கு தகவல் அனுப்பும்படி இரு அவைகளின் தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளதாக'' அவர் குறிப்பிட்டார். 14 பேர் கொண்ட கூட்டறிக்கையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் மறுத்தார். அதன் நகலையும் பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பந்துக்கு அனுப்பினார். ஸ்வீடனுக்கு செல்ல தாம் கேட்டதாக கூறப்பட்ட புகாரை கடுமையாக ஆட்சேபித்தார். உண்மையில்,

★ போஃபர்ஸ் ஊழல் வெளிவந்தவுடன் ஸ்வீடன் அரசாங்கம், தனது நாட்டின் தலைமைக் கணக்குத் தணிக்கை அமைப்பைக் கொண்டு, தனியார் நிறுவனமாக இருந்தாலும், போஃபர்ஸ் நிறுவனத்தின் இந்திய வர்த்தக கணக்குகளைத் தணிக்கை செய்தது. (அதன் அடிப்படையில் தான் கமிஷன் கொடுக்கப்பட்டது உண்மை என்று முதன் முதலில் உறுதி செய்தது)

★ இந்திய அரசாங்கமோ, தானே அப்பேரத்தில் ஈடுபட்டிருந்தும், ஸ்வீடனிலுள்ள இந்திய தூதரகம், இந்திய அரசாங்கமும் இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அமைப்பை பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கியும் கூட ராஜீவ் அரசு அதற்கு செவி மடுக்கவில்லை.

★ தணிக்கைக்கு ஆவணங்களை ஒப்படைக்க 2 ஆண்டுகாலமாக மறுத்தது; இழுத்தடித்து மறைமுகமாக மிரட்டியது; போஃபர்ஸ் பேரத்தை ஆய்வு செய்ய நாடாளுமன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழு கடைபிடித்த வழிமுறையை விசுவமான அறிக்கை சமர்ப்பிப்பது பின்பற்ற நிர்பந்தித்தது; இதற்காக பாதுகாப்புத் துறை செயலரே நேரடியாக சட்டவிரோதமான முறையில் '89 ஏப்ரல் 6, 8 தேதிகளில் தணிக்கை அதிகாரிகளை சந்தித்தது — ஆகிய விபரங்களை சதுர்வேதி தெரிவித்தார். இதை தணிக்கை அறிக்கையிலே தான் விவரமாக குறிப்பிட்டிருப்பதைசுட்டிக் காட்டினார்.

செயலிழக்க வைக்கும் வியூகத்தைக் கடை பிடித்த எதிர்க்கட்சியினர், ''பலன் இல்லை'' என்று ஒட்டுமொத்த ராஜினாமாவில் இறங்கினர். அ.தி.மு.க; காஷ்மீர் தேசீய மாநாட்டு கட்சியினர் வழக்கம் போலவே ராஜீவுக்கு விசுவாசம் தெரிவித்து நாற்காலியில் அமர்ந்து கொண்டனர். தி.மு.க. உள்பட 12 எதிர்க்கட்சிகளைச் சார்ந்த 92 எம்.பிக்கள் தங்களது ராஜினாமாக்களை சமர்ப்பித்தனர்.

இதற்கு காரணத்தை விளக்கி ஒரு விரிவான தீர்மானத்தையும் எதிர்க் கட்சிகளின் கூட்டுத் தலைமை வெளியிட்டது. ''கடந்த சில ஆண்டுகளில் நாடாளுமன்றம், நீதித்துறை என்று அரசியல் சட்டப்படி இயங்கும் பல்வேறு அமைப்புகளின் தரத்தைத் தாழ்த்தவும் அவற்றின் மாண்பைச் சீர்குலைக்கவும் முயற்சிகள் நடந்துள்ளன. ஆளுங்கட்சியின் அதிகப் பெரும்பான்மை பலம், எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்கவும் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் மரபுகளை நசுக்கவும் பயன்படுத்தப்படுகிறது. தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை மீது விவாதம் என்ற பெயரால் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கவும், அதன் தீர்ப்புகளை வலுவிழக்கச் செய்யவும் இ.காங்கிரசின் பெரும்பான்மை பலம் பயன்படுத்தப்படுகிறது... இந்த நிலையில் மக்களவை மக்களின் பிரதிநிதியாக இல்லை. அதனால் மக்களவை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்கிறார்கள்.... மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை எதிர்க்க மாநிலங்களவையில் (ராஜ்யசபாவில்) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்படுவார்கள்'' என்றனர். ஒருவார காலமாக தலைமறைவாகிப்போன ராஜீவ் காந்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ராஜினாமா கொடுக்கத் துவங்கிய நாளன்று ''எலியைப் போல்'' வந்து உட்கார்ந்திருந்தார். எதிர்க்கட்சிகளின் ராஜினாமாவை ''தேர்தல் ஸ்டண்ட்'' என்று வர்ணித்த காங்கிரசு சூரப்புலிகள் ''ஒரு சதிகார கும்பலின் நிர்பந்தத்திற்கு ஆட்பட்டு இவர்கள் ராஜினாமா செய்கிறார்கள். இதை சபாநாயகர் ஏற்கக் கூடாது'' என்று பீதியடைந்து அலறினார்கள். மக்களிடம் பலம் பெற எதிர்க்கட்சியினருக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துவிடும் என்று உண்மையிலேயே பயந்து போனார்கள்.

சதுர்வேதி போன்ற அதிகாரியை அல்ல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை இதனினும் கீழ்த்தரமாக அவமானப்படுத்தியது, ராஜீவால் அமர்த்தப்பட்ட சங்கரானந்த் தலைமையிலான, நாடாளுமன்றத்தின் (காங்கிரசு விசுவாசிகளின்) கூட்டு ஆய்வுக் குழு.

★ போபர்ஸ் பீரங்கி பேரத்தில் ''நடந்ததாக''க் கூறப்படும் ஊழலை விசாரிக்க அமைக்கப்பட்ட இக்கமிட்டியில், ராஜீவ்காந்தியின் நேரடி விசுவாசிகளே பெரும்பான்மையாக இருந்தனர். அவர்கள் அநேக கூட்டங்களுக்கு திட்டமிட்டு வரமறுத்தனர். இதனால் விசாரணை நாட்கள் தள்ளிப் போடப்பட்டு, அதன் வேலை நாட்கள் திட்டமிட்டு குறைக்கப்பட்டது. விசாரணையும், பரிசீலனையும் கேலிகூத்தாக நடந்தது.

★ பேரத்தின் ஆவணங்களை பரிசீலிப்பதற்கு மாறாக, போஃபர்ஸ் பீரங்கி வெடிப்பதை வேடிக்கைப் பார்க்க, உறுப்பினர் அழைத்துச் செல்லப்படுவதுதான் அதிக நாட்கள் நடந்தது.

★ கூட்டங்களின் நிகழ்ச்சிநிரல் பற்றியோ, ஆராயும் ஆவணங்களைப் பற்றியான தலைப்புகள் பற்றியோ உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே எந்த தகவலும் தருவது இல்லை. 2 மணி நேரத்திற்கு முன் கூட்ட அறிவிப்பு கொடுத்து சாட்சிகள் விசாரணை நையாண்டி செய்யப்பட்டது.

★ அரசு காட்டிய சில குப்பை ஆவணங்களில் கூட பல பகுதிகள் வெட்டப்பட்டு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டது. 5 பிரதிகளிலேயே மொத்தக் கமிட்டி உறுப்பினர்களும் ஆராய வேண்டும் என நிர்பந்திக்கப்பட்டனர்.

★ ஊழலில் சம்மந்தப்பட்டதாகக் கருதக்கூடிய விசாரணையில் ஒரு நபரான, போஃபர்ஸ் நிறுவன தலைவன் மார்பெர்க், உபதலைவன் கெத்தலின் இருவரையும் ''நம்முடைய பெருமைக்குரிய விருந்தாளிகள்'' என்று உறுப்பினர்களுக்கு கமிட்டி தலைமை அறிமுகப்படுத்தி வைத்தது. அநாகரிகமானவன் தான் ,பெருமைக்குரிய விருந்தாளியைக் கேள்வி கேட்பான்! எனவே, விசாரணை கைதியாக வந்தவனை வணக்கம்

www.padippakam.com



சி.ஏ.ஜி. அறிக்கை வெளியாளதையடுத்து ஒட்டுமொத்த ராஜினாமா, பதவியைத் துறந்த எதிர்கட்சி எம்.பி.க்கள்

சொல்லி வழியனுப்பி வைத்தார்கள், கமிட்டி உறுப்பினர்கள்.

★ உறுப்பினர்கள் கோரிய பிறகும் சம்மந்தப்பட்டவர்களிடம் குறுக்கு விசாரணை மறுக்கப்பட்டது.

மாபெரும் கோமாளி கூத்து, சதிபோல் நடத்தப்பட்டது. இதன் முடிவில் இக்கமிட்டி, ''மிகக் குறைந்த விலையில் வாங்கப்பட்ட மிகச் சிறந்த பீரங்கி'' என்று அறிக்கை சமர்பித்த நாடாளுமன்றத்தையே அவமானப்படுத்தியது.

—இவ்வாறு ஏராளமான உதாரணங்கள். ராஜீவ் மற்றும் காங்கிரசின், கிரிமினல் நடவடிக்கைக்களுக்கு ஒரு நீண்ட வரலாறே உண்டு.

உதாரணத்திற்கு போஃபர்ஸ் பிரச்சனையையே எடுத்துக் கொள்வோம். அப்பேரத்தின் ஆரம்ப விவாதமே ராஜீவின் அண்டப்புளுகோடுதான் ஆரம்பமானது! சட்ட விதிகளை வளைத்து விமல் துணை ஆலை முதலாளி அம்பாணி அதிரடி வளர்ச்சி மற்றும் தன்னோடு மோதிய ராஜீவின் அண்டப்புளுகுகளை அம்பலப்படுத்திய ஜெயில்சிங் கடிதம் ஆகியவற்றை வெளியிட்ட எக்ஸ்பிரஸ் நாளேடு மீது அரசு சோதனை நடத்தியது.

''அரசு இரகசியங்களைத் திருடி அந்நிய உளவு நிறுவனத்துக்கு கடத்த முயன்றதால்'' அரசு சோதனை நடத்தியது என்று ராஜீவ் சொன்னது. 'பேர்ஃபாக்ஸ்' அமெரிக்க உளவு அமைப்பின் தலைவருக்கும் எக்ஸ்பிரஸ்சுக்கும் கள்ளத்தொடர்பு என்று ''போலி'' ஆவணம் காண்பித்தது; அதே உளவு நிறுவனத்தை ராஜீவ் அரசு பயன்படுத்தியிருந்தது வெளியில் வந்தது.

உளவறிய அல்ல, ''தகவல்'' பெறுவதற்காக அதனிடம் அணுகியதாக ராஜீவ் மீண்டும் புளுகியது: ''உளவு''க்குத்தான் இந்திய அரசு நியமித்தது என்று அதன் தலைவர் அம்பலப்படுத்தியது, ''நாடாளுமன்றத்தில் இதை விவாதிக்க'' தயார் என ராஜீவ் மார்தட்டியது, பிறகு பல்டி அடித்தது.

விவாதத்திற்கு பதிலாக ராஜீவ் விசாரணை கமிஷனுக்கு தாவியது, தக்கர் - நடராஜன் விசுவாச நீதிபதிகளை அதற்கு நியமித்தது. பேரத்தின் ரகசிய ஆவணங்கள் காட்ட வேண்டிய கட்டாயம்; விசாரணை கமிஷன் தீர்ப்புக்களை வெளியிட, அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் ஆகியவற்றிலிருந்து ராஜீவ் அரசு இதன் மூலம் தப்பித்தது

சுவீடனின் சுயாட்சி ரேடியோ போஃபர்ஸ் பேரத்தை அம்பலப்படுத்திய போது, ''அப்பேரத்திற்கு இடைத்தரகர்களே நியமிக்கவில்லை... விசாரித்து குற்றவாளிகளை தண்டிப்போம்'' என்று அடித்து பேசியது. இது ''இந்தியாவுக்கு ஆயுதங்கள் வாங்குவதை தடுக்கவும் தற்காப்புத் திறனை பலவீனப்படுத்தவும் செய்யப்படும் முயற்சி'' என்று புளுகியது. தான் நியமித்த தக்கர் - நடராஜன், விசாரணைக் கமிஷனிலேயே அப்பட்டமாக குறுக்கு விசாரணையை மறுத்தது.

தற்போது சி.ஏ.ஜி அறிக்கையை ''வக்கிரமானது'' என்று சாடும் கிழட்டு நரி என்.கே.பி.சால்வே, தக்கர் - நடராஜன் விசாரணைக் கமிஷன் தீர்ப்பை ''மகிழ்ச்சிக்குரியது'' என்று உச்சிமுகர்ந்தது; ''இந்து'' பத்திரிக்கை, ராஜீவ் கும்பல் சங்கேத மொழிகளில் பெற்ற ரூபாய் 60 கோடி கமிஷனை அம்பலப்படுத்தியது.

பேரம் அம்பலப்பட்டவுடன் ஸ்வீடன் பிரதமர் பாமே மர்மமான முறையில் கொல்லப்பட்டது; அதே போன்று எச்.டி.டபிள்யூ ஊழல் பேரம் அம்பலமானவுடன், அக்கம்பெனியிடம், நேரடி பயிற்சி பெற்ற 'காமாண்டர்' பம்பாயில் மர்மமான முறையில் சுடப்பட்டு இறந்து கிடந்தது; அதன்பிறகு, அந்த பேரத்தில் எந்த ஊழலும் இல்லையென அதற்கான விசாரணையை மூட்டைக்கட்டி வைத்தது.

அனைத்திற்கும் மேலாக நாடாளுமன்ற விசாரணைக் கமிட்டியே நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதித்தது - இப்படி முடிவேயில்லாமல் ''சட்டப்படி இயங்கும் பல்வேறு அமைப்புகளின் தரத்தைத் தாழ்த்தவும், அவற்றின் மாண்பைச் சீர்குலைக்கவும் நடந்த முயற்சிகளுக்கு'' அதிகமாக அலட்டிக் கொள்ளாத (அதிகம் போனால் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்வதையே தங்களது தொழிலாகக் கொண்டிருந்த) எதிர்க்கட்சிகள் தற்போது மட்டும் ஒட்டுமொத்த ராஜினாமா ''தியாக'' தீயில் குதித்து தங்கள் பரிசுத்தத்தை நிரூபித்திருப்பது வேடிக்கைக்குரியது தான்!

''ஆளுங்கட்சியின் அதீத பெரும்பான்மை பலம் எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்கவும், பின்பற்றப்பட்டு வரும் மரபுகளை நசுக்கவும் பயன்படுத்தப்படுவது'' தற்போது மட்டுமல்ல, அவர்களே கூறுவது போல் ''ராஜீவ் ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருவது'' தான்! அப்போதெல்லாம் ''மக்களவை மக்களின் பிரதிநிதியாக 'இல்லை'' என்று எதிர்க்கட்சிகள் உணராமலிருந்தது இன்னும் வேடிக்கைக்குரியது!

மக்களிடமே மீண்டும் சென்று மறுபடியும் அவர்களின் ஒப்புதலைப் பெறத் தீர்மானித்திருக்கிறோம்'' என்று எதிர்க்கட்சிக்கள் கூறும் ஒரு முடிச்சில்தான் அவர்களது அனைத்து தந்திரமும் அடங்கியுள்ளது. அதேப் போல் பாராளுமன்ற ஜனநாயகத்தின் கையாலாகத்தனமும் பித்தலாட்டமும் கூட இந்த முடிச்சில்தான் அழுந்தியுள்ளது.

திரும்ப திரும்ப நிரூபிக்கப்பட்ட ஒரு. பகிரங்கமான கிரிமினல் குற்றவாளியைக் கூட அவன் மக்களின் பிரதிநிதி என்ற போர்வையில் இருக்கும் வரை இந்த நாடாளுமன்ற அமைப்பு நிறுவனங்களாலேயே அவனை தண்டிக்க முடியாது! மக்களிடம் ஓட்டுச் சீட்டு வாங்கி செல்லும் ஒருவன் அவனுடைய உரிமம் முடியும் வரை கூட யோக்கியவனாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை! ஏனெனில் அதற்கான உத்திரவாதம் எதையும் இந்த நாடாளுமன்ற ஜனநாயகம் மக்களுக்கு வழங்கவில்லை! மக்களின் பிரதிநிதி 5 ஆண்டு காலத்திற்குள் இந்த நாட்டையே சூறையாடினாலும், நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு நிறுவனங்கள் கைகட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டுதான்தான் இருக்கும். மக்களும் அந்த 5 ஆண்டு காலம் வரை வாய்மூடி மௌனியாகத்தான் இருக்க வேண்டும். இதற்கான உரிமம் தான் ஓட்டுச் சீட்டு! 5 ஆண்டு காலத்திற்கு பிறகு அவன் திரும்பவும் மக்களை அணுகினால்.....! அவனை நிராகரிக்கலாம்! அப்போதும் அவனை தண்டிக்க முடியாது!

அவசர நிலையைக் கட்டவிழ்த்து விட்டு பேயாட்டம் போட்ட அன்னை இந்திராவையே மக்கள் திரும்பவும் ஏகப்பெரும்பான்மையாக தேர்ந்தெடுத்தார்கள்! உடனடி தண்டனை இல்லையென்ற நிலையில் ஜனங்களின் ஞாபக மறதியை வைத்து கிரிமினல்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதும் நடக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

எனவே, ராஜீவ் காந்தி என்ற ஒரு கிரிமினல் குற்றவாளியை அல்ல அவ்வாறு ஆயிரம் ராஜீவ் காந்திகளை உருவாக்க ஊற்று மூலமாக இருக்கும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை தூக்கியெறிவதுதான் இன்று மக்களின் முன்னுள்ள ஒரே பணி! எதிர்க்கட்சிகளின் அரசாங்கத்தை அல்ல. தேர்ந்தெடுக்கவும் தவறு செய்தால் உடனடியாக திருப்பியழைக்கவும், தண்டிக்கவும் மக்களின் கரங்களில் அதிகாரத்தை குவிக்கும், உழைக்கும் மக்களின் கூட்டு சர்வாதிகாரத்தை - புதிய ஜனநாயகத்தை அரியணையில் ஏற்ற போராட்டத்தை கட்டவிழ்த்து விடவேண்டும்.

— மனரி

படிப்பகம்

www.padippakam.com



# கவர்ச்சித்திட்டங்கள் காகிதப் பூக்கள்!

என்ன இருந்தாலும் கருணாநிதி கருணாநிதிதான்! பாட்டி, வடை, காக்கா என்று அந்தக்கால பள்ளிக்கூட கதையில் வரும் சாதாரண நரி அல்ல கருணாநிதி! ஆடு நனைகிறதே என்று கண்ணீர் வடிக்கும் புத்திசாலி ஓநாய்தான் கருணாநிதி!

அடிமுதல் நுனிவரை ஊழலின் உறைவிடங்கள்தான் அரசுத் துறையின் சேவைத் துறைகள். இது அனைவரும் அறிந்தது. இருந்தாலும் அதை ஒழித்துக்காட்டுகிறேன். ஒருகை பார்த்துவிடுகிறேன் என்று ஆரம்பசூரத்தனங்கள் மூலம் வட்டமடித்துக் காட்டினார், கருணாநிதி.

அரசு மருத்துவமனைகள், நியாயவிலைக் கடைகள், வருவாய்த்துறை அலுவலகங்கள் என்று கருணாநிதியின் மந்திரிகள் மந்தை மந்தையாக படையெடுத்தனர். அடிமட்ட ஊழியர்கள்தான் ஊழலுக்கும், நிர்வாக முடக்கத்திற்கும் காரணம் என்று வரிசை வரிசையாக கண்டுபிடித்து தண்டித்தார்கள்.

ஒழுங்கின்மைக்காக 'நர்சு'களும், 'பியூன்'களும்தான் தண்டிக்கப்பட்டதாக பத்திரிக்கையில் செய்தி வந்ததேயன்றி, அரசு மருத்துவமனையின் தலைமைமட்ட மருத்துவர்களோ, துறை பொறுப்பில் உள்ள உயர்மட்ட அதிகாரிகளோ தண்டிக்கப்பட்டதாக ஒரு செய்தியும் காணோம்! அதன் பிறகும் ஊழல் குறையவில்லை. நிர்வாகம் சீர்படவில்லை.

குறிப்பாக, மக்கள் நேரடி உறவு கொண்டுள்ள அரசு நியாயவிலைக் கடைகளில் ஊழல் அப்படியேதான் இருக்கிறது. இப்போது கருணாநிதி வெடிக்கிறார்! ''ரேஷன் கடைகளில் சில 'எலி'களும், 'பெருச்சாளி'களும் புகுந்து மக்களின் பொருட்களை அபகரிக்கின்றன. மக்களின், தேவைகள் மக்களைப் போய்ச் சேராமல் அபகரிப்பதன் மூலம் முனைப்போடு செயல்படும் அரசுக்கு முட்டுக்கட்டை போடும் சமுதாயத் துரோகிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்'' என்று எச்சரிக்கை விடுத்தார். ''அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஒரே நாள் இரவில் கிராம அதிகாரிகளையெல்லாம் வீட்டிற்கு அனுப்பினார் அல்லவா, அதைப்போல இவர்களும் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள்'' என்று மிரட்டுகிறார்.

ஆனால் அதே நேரத்தில் உயர்மட்ட அதிகாரிகள் என்றால் வாலை குழைகிறார். கீழ்மட்ட ஊழியர்களைத் தாக்கிய அதே கூட்டத்தில், இலவச திட்டங்கள் வழங்கிய கோவை கூட்டத்தில் அதிகாரிகளை இப்படி புகழ்கிறார். ''... இருபதாயிரம் பேருக்கு ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பெரும் முயற்சியிலே ஈடுபட்டு மிகுந்த எழுச்சியோடு இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் இராமன் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன் ..... இங்கே நிதிஉதவியைப் பெற்றோர் தவிர இந்த நிகழ்ச்சிக்கு பிறகு அதிகாரிகளின் மூலமாக மற்றவர்கள் பெறவிருக்கிறார்கள். அது ஒழுங்காக, செம்மையாக நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என்று உச்சி முகர்கிறார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும் கருணாநிதியின் மக்கள் நலத் திட்டங்களுக்கு மனமுவந்து சேவை செய்கிறார்கள். ஆனால், தலைசொறிந்து அதிக சம்பளம் கேட்கும் அரசு அடிமட்ட ஊழியர்களோ கைஅரிப்பெடுத்து கருணாநிதிக்கு களங்கம் கற்பிக்கிறார்கள், என்று கொதிப்படைந்த மக்களுக்கு கதை சொல்கிறார் கருணாநிதி. இதற்காக அவர்களை தண்டிக்கவும், மக்களிடம் நேரடியாக குறைகளை கேட்டறியவும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைக் கொண்ட புதுப்புது கண்காணிப்புக் கமிட்டிகளையும், களத்தில் தண்டிக்கும் பறக்கும் படைகளையும் அமைத்து விழிப்புடன் செயல்படுவதாக, வேடிக்கை காட்டுகிறார்.

அரசு அலுவலகங்கள், சேவைத்துறைகள், நியாய வில்லைக்கடைகளில் அடிமட்ட ஊழியர்கள் கைநீட்டுவது உண்மைதான் என்றாலும் அதற்கு பச்சைக்கொடி காட்டுவதே அதிகாரிகளும் மந்திரிகளும் தான் என்பதை வசதியாக இடுக்கில் மறைத்துக் கொள்கிறார், கருணாநிதி. உதாரணத்திற்கு நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டை பார்ப்போம்.

அரிசி, 'பாமாயி'ல், மண்ணெண்ணை, சர்க்கரை, கோதுமை தவிர மற்ற பெரும்பாலான பொருட்கள் வர்த்தக சூதாடிகளிடம் கமிஷன் பெற்றுக்கொண்டுதான் அரசாங்கம் (அதிகாரிகள், மந்திரிகள்) கொள்முதல் செய்கிறது. கமிஷன் கொடுத்ததுபோக இருக்கும் பணமதிப்புக்குத்தான் அப்பொருட்களின் தரம் இருக்கும் என்பது ஊரறிந்த ரகசியம்.

கிடங்குகளை வந்தடையும் சரக்குகள் பல துணை கிடங்குகளுக்கு பிரிக்கப்படுகிறது. ஏறக்குறைய 20, 25 நியாயவிலைக் கடைகளுக்கு என்று மொத்தமாக இருக்கும் ஒவ்வொரு துணை கிட்டங்கிகளிலும், அக்கடைகளின் சார்பாக ஒரு ஊழியர் அங்கு நிரந்தரமாக 'குடோன் ஏஜெண்டு' என்று பணிபுரிகிறார். உடன் 3, 4 எழுத்தர்களும் அங்கு வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு கடைசிப்பந்தியும் அங்கு சரக்கு எடுக்கும் ஒவ்வொரு முறையும் 50 ரூபாய் மாமூல் கட்ட வேண்டும். இல்லையானால், கேட்கும் பொருட்கள் கிடைக்காது, இழுத்தடிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு கடைக்கும் சுமாராக 1500 'கார்டு'தாரர்கள் இருக்கிறார்கள். இதில் 80 சதவிகிதம் கார்டுதாரர்களுக்கு மட்டுமே, அரசு சரக்கு சப்ளை செய்கிறது. குறைந்தது 20 சதவிகிதம் பேர் ஏதாவது ஒரு காரணத்தால் பொருட்கள் வாங்க வரமாட்டார்கள் என்று அரசு காரணம் கூறி நிரந்தரமாக குறைத்து அனுப்புகிறது. இது எழுதப்படாத சட்டம்!

90 சதவிகிதம் சரக்குகளிலும் கடை ஊழியர் 80 சதவிகிதம் பொருட்கள் மட்டுமே விற்றதாக கணக்கு காட்டுகிறார்கள். 10 சதவிகிதத்தை கையிருப்பிலேயே வைத்திருக்கிறார்கள். இல்லையானால், 'மொத்தத்தையும் எப்படி சுத்தமாக விற்று விட்டாய்! ஏதோ ஊழல் செய்திருக்கிறாய்' என்று துளைத்தெடுத்து சிறு தவறுகளைகூட தண்டனைக்குரிய குற்றங்களாக்கி பழிவாங்குகிறது உயர்மட்ட அதிகாரவர்க்கம்.

ஆக, 'சட்டபூர்வ'மாகவே 20 சதவிகிதப் பொருட்கள் உரிமை, 'கார்டு'தாரர்களுக்கு மறுக்கப்படுகிறது. மீதியிருக்கும் 80 சதவிகிதப் பொருட்களில் ஊழல் செய்துதான் இந்த இடைப்பட்ட கூட்டம் 'பிழை'க்கிறது! கிடங்கு மற்றும் ஏற்றும் லாரிகளில் இருக்கும் கூட்டம், 100 மூட்டைக்கு ஒரு மூட்டை என்ற அளவில் பொருட்களை ஓட்டைப்போட்டு உருவிக்கொள்கிறது.

ஒரு கடைக்கு மாதம் 300 மூட்டை அரிசி வந்தால், அதில் மொத்தம் 6 மூட்டை அரிசி குறையும்! இந்த இழப்பை கடை ஊழியர்கள் கார்டுதாரர்களின் தலையில் அப்படியே கட்டிவிடுகிறார்கள். 'கபால்' என்று எடையில் கொட்டுவது, தராசில் தில்லுமுல்லு செய்வது என்ற முறையில் தங்கள்

படிப்பகம்

www.padippakam.com

கைவரிசையை காட்டுகிறார்கள் கடை ஊழியர்கள்.

இதன்னியில், 'ஏரியா மானேஜர்', 'ஆர்.ஐ', 'புட் செல் ஸ்குவாட்', 'லேபர் ஸ்குவாட்', 'லேப் அசிஸ்டென்ட்', 'ஸ்டாக் சப்ளை கொடோன் கீப்பர்', 'கிளியரன்ஸ் ஏஜென்ட்' இப்படி பெருந்தலைகளிலிருந்து கிடங்கை கூட்டும் ஊழியர் வரை கடைஊழியர் மாமூல் கொடுக்க வேண்டும். இது 200 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை வித்தியாசப்படும்.

மேலும் பொருட்கள் ஏற்றி இறக்கும் தலைசுமை கூலி, மண்ணெண்ணை கொணரும் வண்டிக்கூலிக்கு அரசு அனுமதித்த கூலியைவிட உபரி செலவாக நாளொன்றுக்கு குறைந்தது 6 ரூபாய் கைவிட்டு கொடுக்க வேண்டும். அதிகாரிகள் 'பரிசோதனை'க்கு வந்தால், மாமூல் கொடுப்பதுடன், குளிர்பானம் பிரியாணியும் வாங்கித்தர வேண்டும். அவர்களுக்கு, 'பாமாயில்', சர்க்கரை என்று அவ்வப்போது பைகளையும் நிரப்பி அனுப்ப வேண்டும். இந்த வகையில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1500 செலவாகிறது, கடை ஊழியருக்கு!

அதற்கு மேல் அவருக்கு என்று தனியாக சுரண்டல்; அந்த வகையில் ரூபாய் 500லிருந்து 750. பொருட்கள் குறைவு மற்றும் மாமூல் என்ற வகையில் மாதம் குறைந்தது 4,000 ரூபாய் கடை ஊழியர் ஈடுகட்ட வேண்டும். இதற்கு 'போர்டு' மாட்டியா மக்களிடம் வசூலிக்க முடியும்? பொருட்களை குறைத்து போட்டும், இல்லையென்று சொல்லியும்தான் இதை சரிக்கட்ட வேண்டும் என்று சமாதானம் கூறுகிறார்கள்!

'கள்ளச் சாராயம் காய்ச்சுபவன் மனம் திருந்தினாலும் போலீசுக்காரன் எப்படி விடமாட்டானோ, அப்படித்தான், எங்கள் பொழப்பும்' என்கிறார்கள் கடை ஊழியர்கள்.

இந்த லட்சணத்தில் 3 ஆண்டுகாலம் பணிபுரிந்த சென்னை கடைஊழியர்களுக்கு கூட மாத சம்பளம் வெறும் 480 ரூபாய்தான்!

இதை மொத்தமாக கிள்ளியெறியவும், அவர்களின் சம்பளத்தை உயர்த்தவும் துப்பற்ற கருணாநிதி, ''போலீசைக் கண்டால் வணக்கம் வைத்துக்கொண்டு பாதசாரிகளை சவால்விட்டு மிரட்டும் 'பிளேடு பக்கிரியாக' அதிகாரிகளை புகழ்ந்தும் அடிமட்ட ஊழியர்களை விரட்டியும் வேடிக்கை காட்டுகிறார்.

தன்னுடைய யோக்கியதை இப்படியிருக்கும் போது ஓயாத வாய்ப்பந்தல் வேறு கருணாநிதிக்கு! மைய அரசுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு என்று பட்டாசு வெடித்தார்.

கருணாநிதி பட்டாசு வெடித்ததில் கடைசியில் கடைநிலை ஊழியர்களுக்கு காகிதம்தான் மிஞ்சியது. அதிகார வர்க்கத்தின் தலைமை மட்டத்திற்கு தான் உண்மையான சம்பள உயர்வு கிடைத்தது.

சார்பு செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், இணை இயக்குநர்கள், இணைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகிய, சிவில் நிர்வாகம், ''நீதி''த்துறை, பொதுத்துறை, தலைமை மட்ட அதிகாரிகளுக்கு சம்பளம் வாரிக் கொடுக்கப்பட்டது.



'கருணை' வள்ளலாக கருணாநிதி - எஞ்சியதை உருவும் வஞ்சகத்தனம்!

ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை விட அதிகமாக கொட்டப்பட்டது.

முறையே 2700-4300க்கு 3000-4500 எனவும், 3000-4500; 3700-5000, 3700-5000; 4100-5300, 4100-5300; 4500-5700, 4500-5700; 5100-5700 என வழங்கப்பட்டது. இவர்களுக்கு தற்போது சம்பளத்தைவிட 1200 ரூபாயிலிருந்து, 2000 வரை அதிக சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆனால், 10 வருடம் பணிபுரிந்திருக்கும் பியூன், இளநிலை உதவியாளர், பதிவறை எழுத்தர், ஆரம்பநிலை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு குறைந்தபட்சம் 52 ரூபாயிலிருந்து 190 ரூபாய் வரை சம்பள உயர்வு தரப்பட்டது.

உண்மையில், இப்பிரிவு ஊழியர்களுக்கு மைய அரசு ஊதியத்தைவிட பல படிநிலைகளில் இன்னும் 700 ரூபாய் வித்தியாசம் வரை சம்பள குறைவு தொடர்கிறது. பாதிக்கப்பட்ட சங்கங்கள் உண்மைநிலை அறிந்து பாராட்டிலிருந்து பின்வாங்கி, முறையிட ஆரம்பித்தனர். திரும்பவும் அவர்களுக்கு 'கொசு'றாக ரூபாய் 21.75 கோடி, 2,80,000 பேருக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது. அரசு ஊழியர்கள் இறந்தால் 20,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாய் என்ற அறிவிப்பும் இம்மாதிரியான ஏமாற்றுதான்! வருடத்திற்கு 1500 பேர் செத்தால்கூட அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் 5 ரூபாய் நிதியிலிருந்தே இத்தொகையைக் கொடுக்க முடியும்!

அடுத்து கருணாநிதியின் இலவச திட்டங்களின் யோக்கியதையைப் பார்ப்போம்! ஆண்டுக்கு 5 முறை 5 கிலோ இலவச அரிசி திட்டம். இது வழங்கப்படும் மாதங்களில், கார்டுதாரர்கள் வழக்கமாக வாங்கும் 12 கிலோ அரிசியில் 7 கிலோ அரிசிதான் இனி கிடைக்கும். இது ஏற்கனவே அமுலுக்கு வந்துவிட்டது. முதியவர்களுக்கு 30லிருந்து 50 [illegible]

விப்பு! இனி, அவர்களுக்கும் மாதம்தோறும் கொடுத்துவந்த 5 கிலோ இலவச அரிசி நிறுத்தப்படும். இதுவும் கடந்த 2 மாதகாலமாக அமுலுக்கு வந்துவிட்டது.

பள்ளி குழந்தைகளுக்கு 15 நாளுக்கு ஒரு முட்டை என்பது இப்போது அரை முட்டை என்று நடைமுறைக்கு வந்துவிட்டது. இதனால் சென்னை, சைதாப்பேட்டை போன்ற இடங்களில், பகுதிவாழ் மக்களுக்கும், பள்ளி ஆயாக்களுக்கும் அடிதடி சண்டையே நடந்துவிட்டது. தேவையான சப்ளை இல்லாமல், அவர்கள் பாதியாக குறைத்திருப்பதை பகுதிமக்கள் அவர்களிடம் வெறுப்புடன் அணுகுகிறார்கள்! இனி ரேஷன் கடை மாதிரி இதிலும் ஆயாக்கள் கள்ளக் கணக்கு எழுதினால்தான், குழந்தைகளுக்கு முழு முட்டை போடமுடியும் என்ற நிலைமை!

ஆக, தேர்தலில் ஓட்டு வாங்குவதற்கு கட்சித் தலைவர்கள் சொந்தமாக சுருட்டும் பணமிருக்கிறது. அதுவரை தற்போது நடக்கும் தங்களது ஆட்சிக்கு பக்கபலமாக அதிகாரவர்க்கம் முதலாளிகள் துணை தேவை. எனவே அவர்களுக்கு, கண்காணிப்புக் குழு, பெருத்த சம்பள உயர்வு சலுகைகள் என்று, அதிகாரத்தையும், வருவாயையும் பரவலாக்கி அவர்களுக்கு 'நன்றிமறவா' சலுகைகள் அளிக்கிறார் கருணாநிதி.

கீழ்மட்ட ஊழியர்களை, வறிய ஏழைகளை கேட்பதற்கு நாதியில்லை. அவர்களால் ஆட்சிக்கும் எந்த பிரச்சினையும் இல்லை! எனவே அவர்களை சவால்விட்டு மிரட்டுகிறார். நிறைவேற்றாத இலவச திட்டங்களை நிறைவேற்றி விட்டதாக பகிரங்கமாக புளுகுகிறார். அப்படியும் எதிர்த்தால், ஆட்சியிலும் அரசு அலுவலகங்களிலும் எம்.ஜி.ஆர் பாணியில் தம் கட்சி விசுவாசிகளை நிரப்பி பாடம் புகட்டவும் தயார் என பகிரங்கமாக மார்தட்டுகிறார் கருணாநிதி.

[illegible]

படிப்பகம்

www.padippakam.com

# உருக்கு வார்ப்படத் தொழிலாளர்களின் எஃகுறுதிமிக்க போராட்டம்

திருச்சி - துவாக்குடி பகுதியில் சிறியதும் பெரியதுமான நூற்றுக்கும் மேற்பட்ட ஆலைகள் அடங்கிய தொழிற்பேட்டை உள்ளது.



பெரும்பாலும் பொதுத்துறை நிறுவனமான "பெல்" (BHEL)க்கு உதிரிப் பாகங்களைச் செய்யும் நிறுவனங்களாகும். அரசின் நிதி உதவியுடன் தனியார் முதலாளிகள் நடத்தும் இத்தொழிற்சாலைகள தொழிலாளிகளின் உழைப்பைக் கொள்ளையடித்து, அவர்களின் அற்ப உரிமைகளையும் பறிக்கும் அடக்குமுறை நிறுவனங்களாகவே உள்ளன.

ஜோதி மாலியபல்ஸ் என்ற ஒரு தொழில் நிறுவனம் இப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளிலேயே சற்று பெரியது. இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் உள்நாட்டு உருக்குவார்ப்பட தொழிலில் சந்தையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. சில மேலை நாடுகளுக்கும் கூட இங்கிருந்து ஏற்றுமதியாகிறது.

தற்காலிக வேலை நீக்கம், வேயை விட்டு விரட்டுவது முதலான பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்தும், சம்பள மாற்றத்துக்காகவும் கடந்த ஜூன் 29 முதலாக இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். இந்நிறுவனத்தில் அதிகாரிகளை எதிர்த்துப் பேசினாலோ, நிர்வாகத்தின் பொய்யான குற்றச்சாட்டை ஏற்க மறுத்தாலோ, தொழிற்சங்கம் ஆரம்பிக்க முயற்சித்தாலோ விசாரணை என்ற பெயரில் ஆரம்பிக்கும் படலம் வேலையிலிருந்து விரட்டுவது, தற்காலிக வேலை நீக்கம் என்ற பழிவாங்கும் நடவடிக்கையில் போய் முடியும். கிருஷ்ணகுமார் என்பவர் தொழிற் சங்கம் அமைக்க காரணமாக இருந்தார் என்பதற்காக சென்ற ஆண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டார். அதை எதிர்த்து தொழிலாளர்கள் 35 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த பிறகு அவரை மீண்டும் பணியில் அமர்த்திய நிர்வாகம், மீண்டும் இந்த ஆண்டு அவரைப் பழிவாங்கி வேலையிலிருந்து விரட்டியது. இவரைப் போன்றே இன்னும் பல தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர். சமீபத்தில், நிர்வாகத்தின் மிரட்டலுக்கு அடிபணிய மறுத்த தாஸ் என்ற தொழிலாளியை தொழிற்சாலைக்கு உள்ளே விட மறுத்தது. இப்படியொரு புது வகையான நிர்வாகத்தின் பழிவாங்குதலை எதிர்த்துக் கேட்ட ஒரே காரணத்துக்காக 9 பேருக்கு தற்காலிக வேலை நீக்க உத்திரவைத் தயாரித்து அதில் 2 பேருக்கு கொடுத்ததும் தொழிலாளர்கள் முன்னறிவிப்பின்றி உடனே வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

போராடும் தொழிலாளிகள் போலிக் கம்யூனிஸ்டுகளின் சி.ஐ.டி.யு. சங்கத்தில் திரண்டுள்ளனர். இச்சங்கத் தலைமை, போராட்டம் தொடங்கியபோது ஒருமுறை வந்து தொழிலாளிகளைப் பார்த்து விட்டுப் போனது. அதன் பிறகு, அதிகார வர்க்கத்தின் சிவப்புநாடா முறையைப் போலவே, தொழிலாளர்கள் இருக்கும் இடத்திலிருந்து தொலைவில் உள்ள "பெல்" சி.ஐ.டி.யு. சங்க அலுவலகத்துக்கு தொழிலாளர்களை வந்து பார்க்கச் சொல்லியது. அங்கும் தலைவர்கள் இருக்காமல், தொழிலாளர்களை இச்சங்கத் தலைமை பலமுறை ஏமாற்றியது.

தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து கலை நிகழ்ச்சி நடத்தச் சென்ற மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்களிடம், ஒரு சி.ஐ.டி.யு. சங்கத் தொழிலாளி, "உங்களுக்கு இங்கே என்ன வேலை? யார் உங்களை வரச் சொன்னது?" என்று தலைமையிடம் காணப்படும் திமிர்த்தனத்துடன் அணுகினார். பின்னர் நமது தோழர்கள் பொறுமையுடன் விளக்கிவிட்டு நிகழ்ச்சியை நடத்தினர். இப்போது சி.ஐ.டி.யு. சங்கத் தலைமை "இப்போராட்டத்தை யாரோ பின்னாலிருந்து இயக்குகின்றனர்" என்ற சாக்கு கூறி, ஆதரவைக் கை கழுவி விட்டது.

இந்த ஆலையில் கடந்த 18 ஆண்டுகளாக பணி புரியும் நிரந்தர தொழிலாளியின் மாதச் சம்பளம் ரூ.550 தான்! நிரந்தர தொழிலாளிக்கே இவ்வளவு தான் சம்பளம் என்றால் தினக்கூலி, காண்ட்ராக்ட் தொழிலாளிகளின் நிலையைப் பற்றி கூற வேண்டியதில்லை. இவ்வாறு 250 தொழிலாளிகளின் உழைப்பை ஒட்டச் சுரண்டித்தான் 1972ல் 50,000 ரூபாய் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று ஏறத்தாழ ரூ.20 கோடி மூலதனத்தைக் கொண்டதாக கொழுத்துள்ளது. இதுதவிர புதுக்கோட்டை மணப்பாறை, பாண்டிச்சேரி, கோவை முதலான நகரங்களிலும் கிளைகளைத் துவங்கி ஆலமரம் போல பரவி வருகிறது. 1972ல் ஒரு கீற்றுக் கொண்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று தரகு முதலாளிகளுக்கு நிகராக வளர்ந்துள்ளதற்குக் காரணம், சில 'நியாயவான்கள்' கூறுவது போல இதன் முதலாளியின் அபாரத் திறமையோ, முயற்சியோ அல்ல. தொழிலாளிகளை ஈவிரக்கமின்றி சுரண்டிக் கொழுத்தும், நிறுவனத்துக்கு அருகில் உள்ள போலீஸ் - அடியாட்களை வைத்து தொழிலாளிகளை மிரட்டியும், தொழிற்சங்க புரோக்கர்களின் கையாலாகாத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டதாலுமே இந்த அசுர வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த ஆலையில் காற்றில் மிதந்துவரும் நுண்ணிய இரும்புத் துகள்களாலும், மிக அதிக வெப்ப நிலையில் உருகும் இரும்புக் கொப்பரையின் அருகே நின்று பணியாற்றுவதாலும் தொழிலாளிகள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். உருகிய நிலையில் உள்ள இரும்புக் குழம்பு தெறித்து கண் போன தொழிலாளிகளும், உயிரைப் பலி கொடுத்த 6 தொழிலாளிகளும் போலீசின் உடந்தையோடு, 'தொழிலாளர் நல' அதிகாரிகளின் அரவணைப்போடு நிவாரணம் ஏதும் தரப்படாமல் மறுக்கப்பட்டனர்.

இப்படி தொழிலாளர்களுக்கு முற்றிலும் பகைமையான முதலாளியை எதிர்த்த, நியாயமான இப்போராட்டத்தில் பங்கேற்று வழிநடத்த மறுத்து, "யாரோ பின்னாலிருந்து இயக்குகிறார்கள்" என்று கூறி நழுவிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்ட் சங்கத் தலைமையை இன்னமும் போராடும் தொழிலாளர்கள் நம்பிக் கொண்டிருந்தால் அது அவர்களையே ஏமாற்றிக் கொள்வதாகும். துரோக சங்கத் தலைமையைப் புறக்கணித்து, தொழிலாளர்கள் தாங்களே புதிய, புரட்சிகர சங்கத்தை நிறுவிப் போராடுவதன் மூலமே, நிர்வாகத்தின் சுரண்டல், பழிவாங்கும் நடவடிக்கைகளை முறியடிக்க முடியும்.

**— தகவல்: கா.சாமிதுரை.**

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரத்'துக்கு முன்னும் - பின்னும்

ஆகஸ்ட் 15. ''ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று..'' - ஆண்டு தோறும் அரசாங்கம் காதில் தேனாகப் பாய்ச்சும் அந்த ஆனந்த சுதந்திரத்தை இன்னமும் நம்பிக்கையோடு தேடிக் கொண்டிருக்கும், மதிப்புமிக்க இந்திய குடிமக்களில் இவரும் ஒருவர்! இவரால் தன் உடல்வலிவை நம்பி எழுந்து நிற்கவும் முடியாது. எனவே தனது சுவாசத்தைப் போலவே இக்குச்சியையும் விடாமல் தம் உடம்பின் ஒரு உறுப்பாகவே பாவிப்பவர். கீழே கட்டிக்கொண்டிருக்கிறாரே ஒரு துண்டு கந்தை, அதை அவர் காப்பாற்றியாக வேண்டும். எனவே இயங்குவதற்கு உடலில் தசைகளே இல்லையென்றாலும் இயங்கிக் கொண்டிருக்கிறார்; உழைத்துக் கொண்டிருக்கிறார்.

**போலங்கீர். இந்தியாவின் எத்தியோப்பியா! எத்தியோப்பாவில் குழந்தைகளை விற்கிறார்களா என்பது தெரியாது. ஆனால், ஒரிசாவில் இருக்கும் இன்னுமொரு கலகாந்தியான போலாங்கீரில், [illegible] தங்**

துண்டு கந்தைக்காக, தங்கள் பச்சிளங்குழந்தைகளை விற்கிறார்கள். 40 ரூபாய்க்காக! நேற்று வரை தன்னோடு ரத்தமும் சதையுமாக கலந்திருந்த பால்மணம் மாறாத தங்களது இளம் குழந்தைகளை விற்கிறார்கள்!

தங்கள் உடலின் ஒரு பாகத்தை வெட்டி யாராவது பசியாறிக் கொள்வார்களா? இதோ, எமதருமை இந்திய தேசத்து சகோதரர்கள் அப்படித்தான் உயிர் வாழ்கிறார்கள்! மழலை பேசும் தன் பிஞ்சுக் குழந்தையை 40 ரூபாய்க்காக மனம் ஒப்பி விற்பதை வேறு எப்படி சொல்வது?

எங்கோ ஒரு மூலையில் நடக்கும் விசயத்தைப் பெரிதாக்கி கூப்பாடு போடுவதாக, மெல்லிதயம் படைத்த சில நல்லோர்கள் கூட நம்மை வெறுப்புடன் பார்ப்பது புரிகிறது! கறுப்புப் பண முதலாளிகள் தங்கள் மூக்குக் கண்ணாடி 'பிரேம்'களுக்குகூட முத்துக்கள் பதித்து அலங்கரித்துக் கொள்வதும், நுனி விரலால் சில பருக்கைகள் கொறிக்க ஒரு வேளைச்சோற்றுக்கு அவர்கள் 12,000 ரூபாய் செலவழிப்பதும் இவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தங்களைச் சுற்றி வாழும் தங்களது சகோதரர்கள், உழைப்பாளிகள் எப்படி நடைபிணங்களாக வாழ்கிறார்கள் என்பதை கண்டுணர்வதற்கும் அதன் காரணத்தை அறிவதற்கும் இவர்களுக்கு நேரமில்லை. ஏனெனில் இவர்களும் அப்படித்தான் வாழ்க்கைப் போராட்டத்தில் உழன்றுக் கொண்டிருக்கிறார்கள்.

★ தன்னை ஒருவனுக்கு கைப்பிடித்துக் கொடுப்பதற்கு பெற்றோர்கள் படும் வேதனையை கண்டு சகிக்க முடியாமல் எத்தனை இளம் சகோதரிகள் தங்கள் உயிரைத் தீயிட்டு மாய்த்துக் கொள்கிறார்கள்! நம்மைச் சூற்றிதானே அது நடக்கிறது.

★ குழந்தைகளோடு கொலைப்பட்டினி கிடந்து குடும்பத்தோடு தற்கொலை செய்துக்கொள்பவர்கள், நேற்று வரை நம்மோடு வாழ்ந்தவர்கள் இல்லையா?

★ வெறும் கையும் காலுடன், குழந்தை குட்டிகளுடன் நகர்புறங்களின் நடைபாதைகளில் சுருண்டுக் கிடப்பவர்கள் நேற்று வரை நம்மோடு கிராமப்புறத்தில் தோளோடு தோள் கொடுத்து உழைத்த சகோதரர்கள் தானே! 40 ஆண்டுகால சுதந்திரத்தில் வாழ்க்கை எவ்வளவோ மாறிவிட்டது! வசதிகள் எவ்வளவோ கூடிவிட்டது! யாருக்கு?

''வெள்ளைக்காரர்கள் ஆட்சி போய் இந்த கொள்ளைக்காரர்கள் ஆட்சி வந்தது! அதான் நாடே இப்படி சுடுகாடாய் ஆகிவிட்டது. மிருகங்களைவிட கேவலமாக மக்களைச் சுரண்டி வாழ்வது பெருத்து விட்டது! அந்தக் காலத்தில் இந்த அநியாயம் இல்லை.''

''வெள்ளைக்காரன் ஆட்சியில் 70 ஆண்டுகளுக்கு முன் அரிசி விலை என்ன தெரியுமா? ஒரு 'மான்ட்' (37 கிலோ) 4.50 ரூபாய்! அதே அளவு கோதுமை 2 ரூபாய்! சர்க்கரை 10 ரூபாய்! 10 கிராம் சுத்த தங்கம் விலை 32 ரூபாய்! ஒரு மூட்டை சிமெண்ட் வெறும் 3 ரூபாய்! 15 ரூபாய் சம்பளத்தில் ராஜ வாழ்க்கை வாழ்ந்தோம்! காலணா கொடுத்தால் கை அகலத்துக்கு 2 முறுக்கு! வயிறு 'திம்'முனு ஆயிடும்! இந்த மாதிரி நோய் நொடி அந்த காலத்தில் ஏது?''

நோய், நொடி விசயத்தை தவிர மற்ற எந்த விசயத்திலும் கடுகளவும் பொய்

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



யில்லை. அத்தனையும் அப்பட்டமான உண்மை! இருந்தாலும் எத்தனைப்பேர் காலணா முறுக்கையாவது வாங்கி சாப்பிடும் நிலையில் இருந்தார்கள்? இதோ இப்படத்தில் நம் கண்ணெதிரே செத்துக் கொண்டிருக்கிறார்களே இவர்கள் அத்தனைப் பேரும் அப்போது வாழ்ந்தவர்கள்தான்! 1876-ஆம் ஆண்டு சென்னை நகரில் வாழ்ந்த உழைப்பாளி மக்களைப் பற்றி நெஞ்சில் ரத்தம் கசியுமளவு துயரக்கதைகள் சொல்லும் — அந்தக்கால வாழ்க்கையைப் பற்றி சொல்லும் எஞ்சியிருக்கும் அரிய புகைப்படம் இது!

அப்போது வரலாறு காணாத பஞ்சம்! அதன் கோரம்தான் இப்படி என்கிறார்கள், புரட்டு வரலாற்று ஆசிரியர்கள்! அந்தப் பஞ்சத்தில் எந்த ஆங்கிலேய துரையாவது இப்படி உருமாறியிருக்கிறானா? இல்லை. இச்சகோதரர்களின் ரத்தத்தையும் சதையையும் கப்பல் கப்பலாய் கொண்டுபோய் பிரிட்டிஷ் மகாராணியின் அரண்மனையை அங்குலம் அங்குலமாக அலங்கரித்தவர்கள், வெள்ளைப் பரங்கியர்கள்.

அப்பரங்கியர்களுக்கு கங்காணி வேலை செய்த உள்ளூர் பண்ணை பிரபுக்களும், காந்தீய வாரிசுகளும் அந்த ரத்தத்தில் கொஞ்சம் நக்கினார்கள். இந்த அரிய சேவைக்காக, பரங்கியர்களிடமிருந்து தங்களுக்கு 'திவான்', 'பகதூர்' என்று பட்டங்கள் வாங்கி சூட்டிக்கொண்டு பகட்டித் திரிந்தார்கள்.

அந்த காலத்தில்தான் மயோ - ரிப்பன் பிரபு மாநில - உள்ளூராட்சி நிர்வாக அமைப்புகள் கொண்டு வந்தான். அதில் பட்டம், பதவிகள் பெற்று கும்மாளமடித்தார்கள் நமது காந்தீய மூலவர்கள்! அப்போதுதான் நமது இந்த முன்னோர்கள், உழைப்பாளி சகோதரர்கள் கொலைப்பட்டினியில் புழு பூச்சிகள் போல சாலையோரங்களில் வாழ்ந்து மடிந்தார்கள்.

சுதந்திரம்! அதற்கு முன்னும் பின்னும் உழைக்கும் மக்கள் ஒரே வாழ்க்கையைத்தான் அனுபவித்திருக்கிறார்கள், அனுபவித்து வருகிறார்கள்! அதுதான் நரக வாழ்க்கை! அதேபோல், நம்மையும், நம் முன்னோர்களை ஆட்டி படைத்தக் கூட்டமும் ஒரே வாழ்க்கையைத்தான் அனுபவித்து ரசித்தது; ரசித்து வருகிறது. அதுதான் சொர்க்கமயமான வாழ்க்கை!

கடைகோடி அவமான வாழ்விற்கும், மிருகங்களைவிடக் கேவலமான சாவிற்கும் பிறந்தவர்கள் அல்ல நாம்! புயலென சீறியெழுந்து சமுதாயத்தைப் புரட்டிப் போடுவோம்! இந்த உலகத்தின் இன்பத்தை எல்லாம் சுவீகரிக்க நமக்கு உரிமையுண்டு! அந்த உரிமை நமக்கு மட்டுமே உண்டு! அதை நிரூபிப்போம்!

○குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

# பாட்டாளி மக்கள் கட்சி பகுஜன் சமாஜ கட்சி

# பகிரங்கமாக சாதிய அரசியல்!

**சா**தி ரீதியிலான கூட்டணிகளாக இரு கட்சிகள் கடந்த மாதம் அடுத்தடுத்த நாட்களில் சென்னையில் துவக்க விழாக்கள் நடத்தியுள்ளன. அவை ஏறக்குறைய ஒரே கோட்பாடு, இலட்சியம் கொள்கைகளைச் சொல்லிக் கொள்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், மேல்சாதியினரின் ஆதிக்கம் - ஆட்சியை வீழ்த்துவது; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கீழ்சாதியினரின் கூட்டாட்சியை அமைப்பது. இவைதான் இரண்டு கட்சிகளின் இலட்சிய நோக்கம்.

பகுஜன் சமாஜ கட்சி. வடமாநிலங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினரிடையே கணிசமான செல்வாக்குப் பெற்றுள்ளது. அதன் தமிழ்நாட்டுக் கிளை கடந்த ஜூன் 15ந் தேதி சென்னை பெரியார் திடலில் துவக்கவிழா நடத்தியது. அக்கட்சியின் ஏகபோகத் தலைவரும், நிறுவனருமான கன்ஷிராம் நேரில்வந்து சிறப்புரையாற்றினார். எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா கட்சிப் பிரமுகர் கோவைச் செழியன் தலைமை உரையும், அதன் இணைப்பொதுச் செயலாளர் இராம.வீரப்பன் துவக்க உரையும் நிகழ்த்த பல சாதி - சாதித்தொழில் சங்கங்களின் தலைவர்கள் வாழ்த்திப் பேசினர்.

இடஒதுக்கீடு கோரி கடந்த சில ஆண்டுகளாகப் பல போராட்டங்களும் - பேரங்களும் நடத்தி தமிழகத்தின் வடமாவட்டங்களில் செல்வாக்கும் பிரபலமும் அடைந்துள்ளது, வன்னியர் சங்கம். அதன் 'சமூக சம உரிமைக் காவலர்' 'டாக்டர் ஐயா' ராமதாஸ் பாட்டாளி மக்கள் கட்சி என்கிற சாதிகளின் கூட்டணிக் கட்சியை நிறுவியுள்ளார். கடந்த ஜூன் 16ந்தேதி சென்னையைக் குலுக்கும் பேரணியும், மெரினாவில் துவக்க விழாவும் நடத்தினர். வன்னியர் சங்கத் தலைவர்கள் தவிர வடநாட்டு சத்திரிய சங்கங்களின் இரு தலைவர்களும், பல்வேறு சாதிகளின் சங்கத் தலைவர்களும் வாழ்த்துரை வழங்கினர். கூடவே புரட்சிச்சாயம் பூசிக்கொண்ட 2, 3 தலைவர்களும் பாட்டாளி மக்கள் கட்சியை வாழ்த்தினர்!

கட்சிகள் பிளவுபடுவதும், புதிய கட்சிகள் தோன்றுவதும், பழைய கட்சிகள் மறைந்து போவதும், அரசியல் கட்சிகளிடையே ஐக்கியம், கூட்டணி பேரங்களும் நமது நாட்டில் அன்றாட செய்திகள் தாம்! என்றாலும் அதுபோல வழக்கமான ஏதோ ஒன்று என்று இந்தக் கட்சிகளை ஒதுக்கிவிட முடியாது. கன்ஷிராமும் ராமதாசும், அவர்களுடைய தலைமையிலான அமைப்புகளும் நான்கைந்து ஆண்டுகளில் பிரபலமாகி விட்டவர்கள். கணிசமான அளவு மக்களைத் திரட்டி செல்வாக்கும் பெற்றுள்ளனர். இவர்களுடைய ஆதரவு அல்லது எதிர்ப்பு பல தொகுதிகளின் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கக்கூடியது. கூட்டணி - தேர்தல் உடன்பாடு எதிலும் பங்கேற்காது தனித்துப் போட்டியிட்டாலும், வோட்டுகளைப் பிளவுபடுத்தி பிரதானக் கட்சிகளின் வெற்றி - தோல்விகளைத் தீர்மானிப்பதாக இருக்கும். எனவேதான் இவர்களைக் கண்டு பயந்து போய், ஆளுங்கட்சி - எதிர்க்கட்சிகள் ஆகிய இரு தரப்புகளுமே இவர்களை வளைத்துப் போட பேரங்கள் நடத்துகின்றன.

குறுகிய காலத்திலேயே இந்த அளவு அரசியல் செல்வாக்குப் பெற்றுவிட்ட இவர்களின் கோட்பாடு, இலட்சியம், கொள்கைகள் என்ன? அவை எந்தப் பிரிவினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன - இவை முக்கியமான கேள்விகள்.



'டாக்டர் ஐயா' ராமதாஸ்; முஸ்லிமகள் அணிவித்த தொப்பியுடன்...

''**சா**தியம் என்ற நோய் பீடித்துள்ள இந்திய சமுதாயத்தில் அடிப்படையான, கட்டுமான மாற்றங்களைக் கொண்டு வருவது தான் எங்கள் நோக்கம்'' என்று கன்ஷிராம் அறிவிக்கிறார்.

''கடந்த 40 ஆண்டுகளாக மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சியில் இருந்த கட்சிகள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களைப் புறக்கணித்து விட்டன. காரணம், இந்தக் கட்சிகள் எல்லாம் பார்ப்பன, பனியா மற்றும் பிற மேல்சாதிக் கட்சிகள், எனவே அவற்றை வீழ்த்திவிட்டு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினரின் ஆட்சியை நிறுவுவோம்'' என்று கன்ஷிராம் பிரகடனம் செய்கிறார்.

கன்ஷிராம் தனது வாதங்களுக்கு சான்றாக மத்திய, மாநில அரசுகளின் உயர்பதவிகளில் உள்ள மேல் சாதியினரின் எண்ணிக்கையை எடுத்து வைக்கிறார். அம்பேத்காரின் இலட்சியம் - கொள்கைகளைப் பின்பற்றி கீழ்சாதி மக்களின் விடுதலைக்குப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்கிறார்.

''இதை வன்னியர் கட்சி என்று சொல்லி யாரும் கொச்சைப்படுத்த வேண்டாம். இது அனைத்து மக்களும் இணைந்து தொடங்கியுள்ள கட்சி. 40 ஆண்டு சுதந்திரத்தில் சமூக நீதி கிடைக்கவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி சமூக உரிமையை நிலைநாட்டும். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மத - மொழிவாரி சிறுபான்மையினரை ஐக்கியப்படுத்தி ஆட்சியைப் பிடிப்போம்'' என்று ராமதாசு பிரகடனப்படுத்தியுள்ளார்.

சில மாஜிப் புரட்சியாளர்களும், அவர்களின் போதனை பெற்ற நபர்களும் வன்னியர் சங்கம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றில் புகுந்து கொண்டு மார்க்சியக் கண்ணோட்டம் தர முயன்றுள்ளனர். அவர்களது முயற்சியினால் மார்க்சிய முலாம் பூசிய ஒரு கொள்கை அறிக்கையும் வெளியிட்டுள்ளனர். ''இழக்கப்போவது சாதிகளை மட்டுமே! அடையப்போவதோ பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரம்!'' ''ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே, ஒன்று சேருங்கள்! ஆளும் பாசிச கும்பல்களைத் தூக்கி எறியுங்கள்!'' என்ற முழக்கங்களையும் சேர்த்துள்ளனர்.

அம்பேத்காரின் வாரிசாக கன்ஷிராமை முன்நிறுத்துகிறது பகுஜன் சமாஜ கட்சி. 'சாதியாலேயே முதலாளி - தொழிலாளி பேதம் உண்டான இந்தியாவைப் புரட்டிப்போட ஒரு புதிய முழக்கம் தேவையாக இருக்கிறது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே, ஒன்று சேருங்கள்! என்ற அந்த முழக்கத்தைத் தலைமையேற்று நடக்கும் ராமதாசு மார்க்ஸ், அம்பேத்கார், பெரியார் ஆகியோர் வரிசையில் வரும் தலைவர்' என்று முன்நிறுத்துகிறது பாட்டாளி மக்கள் கட்சி. அதாவது இந்தியாவின் தனித்தன்மை சாதிய அமைப்பு முறை. அதற்கேற்ப மார்க்சியத்தைப் பிரயோகிக்கிறார்கள், அம்பேத்கார், பெரியார், ராமதாசு என்கிறது பா.ம.கட்சி.

நீண்ட நெடுங்காலமாக இந்திய சமுதாயத்தைப் பீடித்துக் கொண்டுள்ள கொடிய நோய் - சாதிய அமைப்பு முறை. காட்டுமிராண்டித்தனமும் வக்கிரமும் நிரம்பியது - சாதிய அமைப்பு முறை. நமது மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பெருந்தடையாய், பெருஞ்சுமையாய் இருப்பது சாதிய

படிப்பகம்

www.padippakam.com

அமைப்பு முறை. நமது சுயமரியாதையையும், மனிதனாக வாழும் உரிமையையும் மறுப்பது - சாதிய அமைப்பு முறை. நமது நாட்டின் மிகப் பெரும்பான்மையினரான கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளும், தொழிலாளர்களும் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதி மக்கள் தாம். அவர்களைச் சாதிய ரீதியில் அடக்கி ஒடுக்கிச் சுரண்டி ஆதிக்கமும் - ஆட்சியும் செலுத்துகிறார்கள் நிலப்பிரபுத்துவ மேல்சாதியினர். இவை மறுக்க முடியாத உண்மை!

ஆனால் சாதீய நோய் பீடித்துள்ள இந்திய சமுதாயத்தில் அடிப்படையான கட்டுமான மாற்றங்களுக்காகப் 'போராடும்' கன்ஷிராமும் சரி. சமூக சமஉரிமைக் காவலர் ராமதாசும் சரி. இரண்டு அடிப்படையான விவகாரங்களை வேண்டுமென்றே தவிர்த்து வருகின்றனர்.

✱ நமது நாட்டின் மிகப் பெரும்பான்மையினரான கூலி, ஏழை, விவசாயிகளை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி ஆதிக்க - ஆட்சி நடத்தும் மேல்சாதிகள் எவை, எவை? தாழ்த்தப்பட்ட - பழங்குடி சாதிகள் தவிர பிற ஒடுக்கப்பட்ட வகுப்புகள் - சாதிகள் எவை, எவை? அதாவது மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளையும், பிற்படுத்தப்பட்ட சாதிகளையும் பிரிக்கும் எல்லைக்கோடு எது? பிற்படுத்தப்பட்ட சாதிகளையும், முற்பட்ட சாதிகளையும் பிரிக்கும் எல்லைக்கோடு எது? இவற்றை எல்லாம் எந்த அடிப்படையில் தீர்மானிப்பது?

கன்ஷிராமும் ராமதாசும் மட்டுமல்ல, திராவிடக் கட்சிகளின் இனமானத் தலைவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவர் அம்பேத்காரும், பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்காக வாதிட்ட மண்டல் கமிஷனும் கூட மேற்கண்ட கேள்விகளுக்குக் குறிப்பான தீர்க்கமான பதில் எதுவும் கூறவில்லை. இந்திய மண்ணின் தனித்தன்மையான சாதியத்தைக் காண தவறியதாக மார்க்சிய ஆசான்கள் மற்றும் மார்க்சிய-லெனினியப் புரட்சியாளர்களைக் குறைகூறும் மாஜிப் புரட்சியாளர்களும் இனவாதிகளும் கூட இக்கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை.

'முற்பட்ட அல்லது பிற்பட்ட சாதிகளை பொருளாதார அடிப்படையில் தீர்மானிக்கக்கூடாது; சமூக மற்றும் கல்வி நிலைமைகள் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்' - இதுதான் ஏற்கனவே மேல்சாதியினர் ஆதிக்கம் - ஆட்சி வகிக்கும் அரசாங்கம் முடிவு செய்து அமுல்படுத்தும் காரணிகள், மண்டல் கமிஷனும் இதையே சிபாரிசு செய்துள்ளது. இது குறிப்பான வழிகாட்டும் வரையறுப்பு அல்ல. எனவேதான் அவ்வப்போது ஆட்சிக்கு வருபவர்கள், பல சாதியினரும் எழுப்பும் கோரிக்கை, ஒட்டுப்பொறுக்கும் அவசியத்துக்கேற்ப இடஒதுக்கீடு பட்டியலை மாற்றிக் கொள்கிறார்கள். ஒருகாலத்தில் முற்பட்ட சாதியாகக் கருதப்பட்ட வெள்ளாளக் கவுண்டர்கள் போன்ற சாதிகளை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொண்டே போகிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்று பிரிக்கிறார்கள். பிறகு சேர்க்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் பிரிவில் கூட புதுப்



அம்பேத்காரின் வாரிசு' (?!) கன்ஷிராம்

கன்ஷிராமின் பகுஜன் சமாஜ கட்சி, அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்துள்ள - மண்டல கமிஷன் சிபாரிசு செய்துள்ள காரணிகளைக் கொண்டே முற்பட்ட, பிற்பட்ட சாதிகளைப் பாகுபடுத்துகிறது. ராமதாசின் பா.ம.க.வும் இதையே ஏற்கிறது. குறிப்பிட்ட சாதித் தொகுதிக்குள்ளும் கிராமப்புறத்தில் வசிப்பவர், கல்வி அல்லது வேலை வாய்ப்பில் முதல் தலைமுறையினராக இருப்பது, குறைந்த வருமானம், தாய்மொழிக்கல்வி, கலப்பு மணம், குடும்பக்கட்டுப்பாடு செய்தவரின் பிள்ளை ஆகிய ஐந்து அம்சங்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் கொடுத்து தெரிவு செய்ய வேண்டும் என்பது பா.ம.க வின் கோரிக்கை. ஆனால் இவை முற்பட்ட - பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் பாகுபடுத்துவதற்கான அம்சங்கள் அல்ல.

அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்துள்ள - மண்டல் கமிஷன் சிபாரிசு செய்துள்ள சமூக மற்றும் கல்வித் தகுதிகளைக் காரணிகளாகக் கொண்டு முற்பட்ட மற்றும் பிற்பட்ட சாதிகளைப் பாகுபடுத்துவது என்பதை கன்ஷிராம் மற்றும் ராமதாசு தலைமையிலான அமைப்புகள் ஏற்றுக்கொண்டிருக்கும் வரை மற்ற பிற அரசியல் கட்சிகளை - போல ஒட்டுப்பொறுக்குவதற்குத் தான் பயன்படும். சமூக சம உரிமை பெறவோ, மேல்சாதி ஆதிக்கம் - ஆட்சியை வீழ்த்தவோ பயன்படாது.

ஏனெனில் சமூக மற்றும் கல்வி நிலைமைகள் ஆகிய இரு காரணிகளில், சாதிகளின் கல்வி நிலைமையைக்கூட புள்ளி விவர அடிப்படையில் குறிப்பாகத் தீர்மானித்து விடமுடியும். சமூக நிலைமை என்பதை எவ்வாறு கணிப்பது? ஒன்றைவிட ஒன்று மேலானது அல்லது ஒன்றைவிட ஒன்று கீழானது என்று அடுக்கடுக்காக - கிரமமான முறையில் சாதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தீண்டத் தகாதவர்களுக்குள்ளும் தீண்டத்தகாதவர்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளும் தாழ்த்தப்பட்டவர்கள். சமூக நிலைமை

னைத்தானே மேல்சாதியாகக் கருதிக் கொள்கிறது. இட ஒதுக்கீடு - சலுகை என்று வரும்போது ஒவ்வொரு சாதியும் தன்னைத்தானே கீழ்சாதியாக வைக்கும்படி நிர்பந்திக்கிறது.

எனவே அடுக்கடுக்கான - கிரமமான முறையில் அமைந்துள்ள சாதிகளில் எந்த மட்டம் வரை தாழ்த்தப்பட்டவை? எந்த மட்டம் வரை பிற்பட்டவை, மிகவும் பிற்பட்டவை? எந்த மட்டத்திற்கு மேலே உள்ளவை மேல்சாதிகள்? - இதை சமூக நிலைமைகளின் அடிப்படையில் குறிப்பாகத் தீர்மானிக்கவே முடியாது. சாதிகளின் கல்வி நிலைமைகளையும் ஒருபோதும் குறிப்பாகக் கணிப்பதில்லை. அரசும் சரி - சாதிகளும் சரி திட்டமிட்டே இதைத் தவிர்க்கின்றன.

ஆகவே சமூக மற்றும் கல்வி நிலைமைகளைக் கொண்டு பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் பாகுபடுத்துவது என்பது வசதிக்கேற்ப வேண்டிய சாதிகளை வேண்டிய தொகுதியில் சேர்க்கவும் விலக்கவும்தான் பயன்படும். அதற்காகத்தான் கன்ஷிராம், ராமதாசு, கருணாநிதி, வீரமணி போன்ற அனைவரும் அந்தக் காரணிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். ராமதாசின் வன்னியர் சங்கம் முற்பட்ட சாதியாக கருதும் வெள்ளாளக் கவுண்டரை கன்ஷிராம் பிற்படுத்தப்பட்ட சாதியாக சேர்த்துக் கொண்டுள்ளார். முக்குலத்தோரில் முற்பட்ட பிரிவினராக அரசு பிரித்து ஒதுக்கியுள்ள மறவர், அகமுடையார் ஆகிய இருபிரிவினரையும் உள்ளடக்கிய தேவர் பேரவையை பிற்படுத்தப்பட்ட சாதியினராக ராமதாசு ஏற்றுக் கொண்டுள்ளார்.

சமூக மற்றும் கல்வி ஆகியவற்றோடு பொருளாதாரத் தகுதியையும் வைத்து சாதிகளைப் பாகுபடுத்துவதுதான் குறிப்பானதாகவும் அறிவியல் பூர்வமானதாகவும், சரியானதாகவும் அமையும். ஆனால் அவ்வாறு செய்வது இரண்டு உண்மைகளை வெளிப்படுத்திவிடும். முதலாவதாக கன்ஷிராம் மற்றும் ராமதாசு ஆகியோரின் சாதிகளிலேயே அடக்கி ஒடுக்கி சுரண்டி ஆதிக்கம் வகிக்கும் நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ வர்க்கத்தினர் இருக்கிறார்கள்; அதேபோல இவர்கள் கூட்டணி வைத்துக்கொள்ளும் மற்ற பிற பிற்படுத்தப்பட்ட சாதிகளிலும் இருக்கிறார்கள். இரண்டாவதாக இந்திய மண்ணின் தனித்தன்மை சாதிய அமைப்பு முறை, மார்க்சிய இலக்கண அடிப்படையிலான வர்க்க வரையறுப்பு இந்தியாவுக்குப் பொருந்தாது என்ற வாதம் பொய்யாகிவிடுகிறது.

இன உரிமை, வகுப்புரிமை பற்றி பெருங்கூச்சல் போடும் திராவிடக் கட்சிகள் கூட இப்படித்தான். ஆரியர்கள் - திராவிடர்கள், பார்ப்பனர்கள் - பார்ப்பனர் அல்லாதவர் என்கிற அறிவியல் பூர்வமற்ற தேசிய இனப்பாகுபாடு செய்துகொண்டனர். இப்போது நடைமுறையில் இல்லாத வர்ணப் பாகுபாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனர் அல்லாத அனைவரும் சூத்திரர்களே என்றனர். சத்திரிய குல நாடார், சத்திரிய குல வன்னியர், ஆரிய வைசியர் என்றெல்லாம் கூறிக் கொள்பவர்களையும் சூத்திரர்தாம் என்றனர். இதனால் உண்மையில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியினரை ஏய்த்து மேல்சாதியினர் ஆதாயம் அடைவதற்குத் தகுந்த முறையில் கோட்பாடுகளை

www.padippakam.com




பெங்களூரில் பகுஜன் சமாஜ் கட்சியின் தொடக்கவிழாக் கூட்டம் - சாதிய அரசியலுக்கு கால்கோள் விழா.

இந்திய மண்ணின் தனித்தன்மை பற்றி முடிவற்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாஜிப் புரட்சியாளர்களும், இனவாதிகளும் கூட இன மற்றும் சாதிப் பாகுபாடுகளுக்கான அடிப்படையையும், பிரிவினையையும் முன்வைப்பதே இல்லை. எந்த அடிப்படையும் இன்றி தான்தோன்றித் தனமாக சில சாதிகள் புரட்சிகரமானவை. வேறு சில சாதிகள் எதிரிகள் என்று ஆனைமுத்து குழு பாகுபடுத்தியது. கேலிக்குரிய முறையில் முடிந்தது. ஏனெனில் புரட்சிகர சாதிகள் என்று ஆனைமுத்து குழு வரையறுத்த சாதிகள்தாம் பீகாரில் தாழ்த்தப்பட்ட மக்களை உயிரோடு கொளுத்தும் எதிர்ப்புரட்சி அணிக்குத் தலைமையேற்கின்றன.

❀ தற்போதுள்ள அரசியல்களில் எவையெவை எந்தெந்த சாதிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன? இதையும் எந்த அடிப்படையில் தீர்மானிப்பது?

இந்தக் கேள்விகளுக்கும் கன்ஷிராம், ராமதாசு, மாஜிப்புரட்சியாளர்கள், திராவிடக் கட்சிகள், புதிய இனவாதிகளிடமிருந்து எந்தவிதப் பதிலும் இல்லை. குறிப்பாக, கடந்த 40 ஆண்டுகளாக மத்திய, மாநில அரசாங்கங்களில் மேல்சாதியினர் ஆதிக்கம் - ஆட்சி நடத்துவதாக கன்ஷிராமும் ராமதாசும் கூறுகின்றனர். இருவரின் அமைப்புகளுமே நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்கள் மூலமே சமூக சமஉரிமைக்காகப் பாடுபடுபவர்கள்! எனவே அனைத்து அரசியல் கட்சிகளின் சாதியத் தன்மையை வரையறுக்க வேண்டியது இவர்களின் பொறுப்பாகிறது.

ஆனால் இந்தக் காரியத்தை வேண்டுமென்றே இவர்கள் செய்யவில்லை. தமது வசதிக்கேற்ப தேர்தல் கூட்டணி அமைத்துக் கொள்வதற்காக வேண்டியே அரசியல் கட்சிகளின் சாதியத் தன்மைபற்றி இவர்கள் வாய் திறப்பதில்லை. குறிப்பாக கடந்த 40 ஆண்டுகளாக மத்திய, மாநில அரசாங்கங்களில்

பிரதிநிதித்துவப் படுத்துவதே காங்கிரசு தான். அந்தக் கட்சியுடன் தான் கன்ஷிராம், ராமதாசு இருவருமே தேர்தல் பேரங்கள் நடத்தி வருகிறார்கள்.

அதே சமயம் ''காங்கிரசு தான் தமது எதிரி'' என்கிறார் கன்ஷிராம். ''கருணாநிதி - திமுக முதல் எதிரி; காங்கிரசு எமது ஜென்ம எதிரி'' என்கிறார் ராமதாசு. இதற்கெல்லாம் சாதிய அடிப்படையிலான பாகுபாடு எதுவும் இல்லை! தமது வசதிக்கேற்ப தான் தோன்றித்தனமாகவும், சந்தர்ப்ப வாதமாகவும் ஓட்டுக்கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்காகவே இப்படிச் செய்கிறார்கள்.

சாதிய நோய் பீடித்துள்ள இந்திய சமுதாயத்தில் அடிப்படையான, கட்டுமான மாற்றங்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் கன்ஷிராமும் சரி. சமூக சம உரிமை காண அரசியல் புரட்சியைப் பிரகடனம் செய்துள்ள ராமதாசும் சரி. புரட்சியின் பிரதானப் பிரச்சினையே நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பது தான். சாதிகளைப் பாகுபடுத்துவதற்கான குறிப்பான அடிப்படைகளையும், அரசியல் கட்சிகளின் சாதியத் தன்மைகளையும் வரையறுக்காத வரை; குறிப்பாக எந்தெந்த சாதிகளுக்கு எதிராக எந்தெந்த சாதிகளுடன் ஐக்கியப்பட்டு ''புரட்சி'' செய்யப் போகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தாத வரை இவர்களுடைய ''புரட்சி!'' எல்லாம் எம்.ஜி.ஆரின் புரட்சியைப் போன்றது தான்.

❀ இறுதியாக, கன்ஷிராமும் ராமதாசும் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்காக வாரிவழங்கும் வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? அதற்கான அதிகாரத்தை எங்கிருந்து பெறப்போகிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கும் நேரடியான, தெளிவான, குறிப்பான பதில் கூறுவதை அவர்கள் தவிர்க்கிறார்கள். ஆனால் கன்ஷிராமும், ராமதாசும் தெளிவாகவே உள்ள

யத்திற்கேற்ப அரசியல் பேரங்கள் நடத்தி தேர்தல் மூலம் ஆட்சியைப் பிடித்து, அந்த அதிகாரத்தைக் கொண்டு ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்குத் தாம் வாரிவழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது. இதுதான் கன்ஷிராம், ராமதாசு ஆகிய தலைவர்கள் தெரிந்தெடுத்துள்ள பாதை.

இவர்களுக்கே, குறிப்பாக ராமதாசுக்கே மார்க்சிய முலாம் பூச முயலும் மாஜிப் புரட்சியாளர்களும் அவர்களுடைய யோசனை பெற்றவர்களும் இன்னும் பல ''புரட்சிகர''மான திட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சிக்குள் புகுத்தியுள்ளனர். அந்நிய மூலதனத்தைப் பறி முதல் செய்வது, தொழில் மற்றும் விவசாயம், வங்கி மற்றும் கூட்டுறவு, கல்வி மற்றும் மொழி - இனம், இடஒதுக்கீடு, மதம் - பண்பாடு என்று சகல பிரச்சினைகளுக்குமான ''புரட்சிகர'' வேலைத்திட்டங்களைக் கூறுகிறது பா.ம.கவின் கொள்கை அறிக்கை. சமுதாய விடுதலை, பொருளாதார விடுதலை, பெண் விடுதலை பற்றியெல்லாம் பேசுகிறது. ''ஜனநாயக உரிமைகளுக்கான சாதிப் போராட்டம், பாட்டாளி வர்க்க அரசியலின் வழிகாட்டுதலில் உருவாக்கப்படும் இன உருவாக்கம், இனங்களின் தனித்த பிரச்சினைகளையும் ஒட்டு மொத்த பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் இந்தியப் புரட்சி என்ற மூன்று தளங்களில் வர்க்கப் போராட்டம் நடைபெறும்'' என்று பா.ம.க அறிக்கை பிரகடனம் செய்கிறது. ஆனால் இவற்றுக்கும் தேர்தல் பேரங்கள், தேர்தல் மூலம் ஆட்சியைப்பிடித்து, சாதி அடிப்படையில் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளுவது போன்ற ராமதாசின் சாதி அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பு - உறவுகளைப் பற்றி அவர்கள் மூச்சு விடவில்லை.

இந்திய சமுதாயத்தில் அடிப்படையான, கட்டுமான மாற்றங்கள், சமூக சம உரிமையை நிலைநாட்டுவது அதாவது சமுதாய, பொருளாதார அரசியல் புரட்சி என்பது மேல்மட்டத்திலிருந்து - நாடாளுமன்ற - சட்டமன்றங்களின் மூலம் ஆட்சியைப் பிடிப்பதன் மூலம் - ஒருபோதும் கொண்டு வரவே முடியாது. கீழிருந்து அதிகாரத்தை கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே முடியும்.

நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்புகள், மந்திரிசபை - செயலகங்கள் மற்றும் அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு நீதித்துறை போன்ற உயர்மட்ட அதிகார நிறுவனங்கள் முதல் கிராம - வருவாய்த்துறை அதிகாரிகள், உள்ளூர் போலீசுக்காரன்கள் வரை படிப்படியாக கிரமமான முறையில் அதிகாரங்கள் வரையறுத்து ஒடுக்கப்பட்ட வகுப்பார் மீது ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இதைக் கீழிருந்து ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலம் அடித்து வீழ்த்தி மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் சமூக, பொருளாதார, அரசியல் புரட்சி நடந்தேறும்.

இதற்கு நேர்மாறாக அரசியல் பேரங்கள் நடத்தி தேர்தல் மூலம் மேலிருந்து ஆட்சியைப் பிடிக்கும் பாதையை வேண்டுமென்றேதான் கன்ஷிராம், ராமதாசு போன்றவர்கள் தெரிவு செய்து கொண்டுள்ளார்கள். முதலாவதாக கீழிருந்து ஆயுதந்தாங்கிப் போரா

www.padippakam.com

கரங்களில் வந்துசேரும். அந்தப் போராட்டத்தின் போக்கிலேயே சாதி வேறுபாடுகளை நிராகரித்து மக்கள் ஐக்கியப்படுவர். ஆனால் மக்களை பலிகிடாக்களாக்கி அரசியல் பேரங்கள் நடத்துவதற்கு மட்டுமே இந்தத் தலைவர்கள் பயன்படுத்த விரும்புகிறார்கள். இரண்டாவதாக கீழிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆயுதப் போராட்டம் நடைமுறையில் - துவக்கத்தில் யார் யாருக்கு எதிராக அமையும்? இடஒதுக்கீடு மூலம் ஆதாயம் அடைந்து, அரசு அதிகார எந்திரத்தின் ஒருபகுதியாகிவிட்ட ஒடுக்கப்பட்ட வகுப்பாரை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி, ஆதிக்கம் வகிப்பதில் பங்கு போட்டுக் கொள்ளும் நபர்களுக்கு எதிராகவே இருக்கும். மேலிருந்து தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி மக்கள் ஆத்திரத்தைத் திசை திருப்பிவிட்டு இந்தக் கூட்டத்தைப் பாதுகாப்பதும் தமது சாதியினரைக் கொண்டு விரிவுபடுத்துவதும்தான் கன்ஷிராம், ராமதாசு போன்ற தலைவர்களின் நோக்கம்.

ஆகவே இந்திய சமுதாயத்தைப் பீடித்துள்ள சாதிய நோயின் பாதிப்புகளை, நோய்க்குறிகளை முன்வைத்து தவறான சிகிச்சை முறைகளை கையாளும் போலி சமூக மருத்துவர்கள்தான் ராமதாசும் கன்ஷிராமும். குணப்படுத்துவதற்குப் பதில் இவர்களுடைய சிகிச்சை முறையினால் சாதிச்சங்கங்கள் புத்துயிர் பெற்று சாதிச்சண்டைகள் தான் அதிகரிக்கும்.

கன்ஷிராம், ராமதாசு ஆகியோர் குறுகிய காலத்தில் பிரபலமடைந்து விட்டதைக் காட்டி, ''வழக்கமான, வர்க்க ரீதியிலான அரசியல் - ஆயுதப் புரட்சி என்கிற மார்க்சியப் பார்வை - பாதை இந்தியாவுக்குப் பொருந்தாது என்று சில மாஜிப் புரட்சியாளர்களும், பழைய - புதிய இன்வாதிகளும் வாதிடுகின்றனர். ''இந்த நாட்டின் தனித்தன்மையான சாதியப் பிரச்சினையை மையமாகக் கொண்டு செயல்படுவதினால்தான் கன்ஷிராம், ராமதாசு தலைமையிலான அமைப்புகள் குறுகிய காலத்தில் வளர முடிந்தது. நாமும் அப்படி சாதிய ரீதியில் புரட்சி செய்ய வேண்டும். கன்ஷிராம் ராமதாசு ஆகியோரது இயக்கங்களை சாதியத் தன்மையுடையவை என்று ஒதுக்கி விடக்கூடாது. ஜனநாயக சக்திகளாகக் கருதி கூட்டுச்சேர வேண்டும். அவற்றுக்குள்ளே புகுந்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்று அவர்கள் உபதேசிக்கிறார்கள்.

''ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்கிற முழக்கம் புதியதல்ல. பா.ம.க வினரே கூறிக்கொள்வதைப் போல 58 ஆண்டுகளாக உள்ளதுதான். உழைப்பாளர் கட்சி, பொது நலக் கட்சி என்கிற பெயரில் மாணிக்கவேலர், ராமசாமி படையாச்சி ஆகிய வன்னிய சாதித் தலைவர்களும், பிறகு ஆதித்தனரும் முன்வைத்து முயன்றவைதாம். மாணிக்கவேலரும், ராமசாமி படையாச்சியும் ராஜாஜி - காங்கிரசிடம் மந்திரி பதவிகளையும், ஆதித்தனார் எம்.ஜி.ஆர் தயவையும் பெற்றதோடு முடங்கிப் போன முழக்கம்தான்!

இவ்வளவு ஆண்டுகளாக தலைதூக்க முடியாத முழக்கம் மீண்டும் தூக்கிப் பிடிக்கப்படுகிறது. காரணம் அரசியல் சூழ்நிலைமைதான். ஏற்கனவே உள்ள ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் வாக்குறுதிகளை நிறைவேற்றாது, லஞ்ச ஊழல் அதிகார முறைகளில் ஈடுபட்டு பரந்துபட்ட மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன. மாற்றாக புரட்சிகர கட்சி தலைமையெடுக்க முடியாமல் சிதறுண்டு, பின்தங்கியுள்ளது; போலிக் கம்யூனிஸ்டுகளும் துரோகமிழைத்து முதலாளித்துவ கட்சிகளின் வாலாகவும் சமூக பாசிஸ்டுகளாகவும் சீரழிந்து போயுள்ளனர்.

இந்நிலையில் நாடுமுழுவதும் சாதி, மத, இன, பிராந்திய ரீதியிலான சக்திகள் தலை தூக்கி குறுகிய வெறியைத் தூண்டிவிட்டு வளருகின்றன. நாடு தழுவிய ரீதியில் அரசியல் சீரழிவு - பின்னடைவு நிகழ்ந்து கொண்டிருக்கிறது; அதன் ஒரு பகுதியாகத்தான் சாதி மதக் கட்சிகளின் வளர்ச்சியே தவிர புரட்சிகரமான - முன்னேற்றத்தை இவை குறிக்கவில்லை.

1947க்கு முன்பு காங்கிரசுக் கட்சிக்குள் புகுந்துகொண்டு, அல்லது வெளியிலிருந்து போராடி விடுதலைக்கான முற்போக்கு தீர்மானங்களை நிறைவேற்றும்படி காங்கிரசை நிர்பந்திக்கும் உத்தியைக் கடைப்பிடித்தார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள். 1972இல் எம்.ஜி.ஆர் தனிக்கட்சி அமைத்தபிறகு, அதனுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு அதன் அணிகளை அப்படியே வளைத்துப் போட்டு விடலாம்; ஏனெனில் எம்.ஜி.ஆர் என்ற தனிநபருக்குக் கீழே அமைப்புகள் கிடையாது; தனிநபர் செல்வாக்குத்தான் உள்ளது; சரியான அரசியல் போதனையளிப்பதன் மூலம் எம்.ஜி.ஆர் அணிகளை வென்றெடுத்து விடலாம் என்று பிரமையூட்டினார்கள், போலிக் கம்யூனிஸ்டுகள்.

இதெல்லாம் எப்படிக் கேலிக்குரிய தோல்வியாக முடிந்தன என்பது யாவரும் அறிந்ததுதான். அதே போல ராமதாசின் தனிநபர் செல்வாக்கு - மேல்மட்டத்தோடுதான் உள்ளது; போர்க் குணமிக்க வன்னிய இளைஞர்களுக்கு சரியான அரசியல் போதனையளித்தால் புரட்சியின் பக்கம் 'இழுத்து' விடலாம் என்று சில மாஜிப் புரட்சியாளர்கள் பகற்கனவு காண்கிறார்கள்.

இவர்கள் தமது சாதிய அரசியலுக்கு பலியாகி விட்டு, அதற்கே மார்க்சிய - புரட்சி சாயம் பூசிக் கொள்கிறவர்கள். மார்க்சிய - புரட்சி அரசியலின் மேலாண்மை மீது நம்பிக்கை வைத்து கடின உழைப்பின் மூலம் பாட்டாளி வர்க்கக் கட்சியையும் - இயக்கத்தையும் கட்டி வளர்க்க மறுத்து குறுக்கு வழியைத் தேடுகிறவர்கள். இந்திய மண்ணின் தன்மைக்கேற்ப கம்யூனிச சித்தாந்தத்துக்கு வியாக்கியானம் கொடுத்து, சீர்திருத்தப் பாதையில் அதைச் சீரழிக்கும் இம்மாதிரியான முயற்சிக்கு சிங்காரவேலர், சர்க்கரைச் செட்டியார், ஜீவானந்தம் என்று ஒரு பாரம்பரியமே உண்டு. அத்தகைய சீரழிவுகளை எதிர்த்த போராட்டத்தில்தான் உண்மையான - புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியையும் இயக்கத்தையும் வளர்த்தெடுக்க முடியும்.

ஆர்.கே

## இன்னுமொரு ஈழத்தை உருவாக்க ரகசிய சதி!

அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைத்து ஆதிக்கம் செய்யத் துடிக்கும் இந்திய விரிவாக்கவாதிகளின் நோக்கத்துக்குச் சாட்சியாக, இன்னுமொரு சூழ்ச்சி இப்போது வெளி வந்துள்ளது. பர்மாவின் வடமேற்கே உள்ள சின், ராகைன் மாநிலங்களில் வாழும் மிஜோ தேசிய இனத்தைச் சேர்ந்த ஜோமி பழங்குடி மக்கள் தமது உரிமைகள் புறக்கணிக்கப்படுவதால் தமது மாநிலங்களை இந்தியாவுடன் இணைக்க கோரி வருகின்றனர். தாது வளமிக்க அரக்கான் மலைப் பிராந்தியத்தை உள்ளடக்கிய இம்மாநிலங்கள் இந்தியாவுடன் இணைந்து விட்டால் தமது கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் பெரும் வாய்ப்பாக அமையும் என்று கணக்கு போட்டு, ஒடுக்கப்படும் மக்களின் நியாயமான கோரிக்கையை ஆதரிக்கும் நண்பனாக நாடகமாடிக் கொண்டு அவர்களை ஆதரிக்கிறது இந்திய அரசு.

பர்மீய ஜோமி விடுதலை முன்னணி என்றழைக்கப்படும் இம்மக்களது போராட்ட அமைப்பின் தலைவர்கள் இப்போது மணிப்பூரின் சுராசந்த்பூரில் முகாமிட்டுள்ளனர். இந்தியாவில் தமது தற்காலிக அரசை நிறுவ உள்ளதாகவும், இதற்கு சர்வதேச ஆதரவு கிடைக்கும் என்றும் கூறுகின்றனர். இவர்களோடு பர்மீய ஜோமி மாணவர் சங்கம், சின் ஜனநாயக முன்னணி ஆகிய அமைப்புகளும் இணைந்து பர்மீய அரசுக்கெதிராக கொரில்லாப் போர் நடத்த ஆள்திரட்டி வருகின்றன. மணிப்பூர் - மிஜோராம் மாநிலங்களின் எல்லையை ஒட்டியதாக இப்பகுதி உள்ளதால் இந்திய அரசு சுலபமாக, ரகசிய ஆயுதப் பயிற்சியும் அளித்து வருகிறது.

மணிப்பூரின் முன்னாள் மந்திரி கௌகின் என்பவர் இந்த இயக்கத்துக்கான இந்தியப் பிரதிநிதி என்ற பெயரில் அரசியல் தரகராக உள்ளார். இவ்வியக்கத்தினர் மத்திய மந்திரி சந்தோஷ் மோகன் தேவ்-ஐச் சந்திக்க கடந்த நவம்பரில் ஏற்பாடு செய்து கொடுத்தார். காங்கிரசு பொதுச்செயலாளர் ஆஸ்கார் பெர்ணாண்டஸ் இதற்கு உதவி செய்துள்ளார். மத்திய மந்திரியும் உரிய நேரத்தில் உதவி செய்வதாக வாக்களித்துள்ளார். இதைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவிடம் இவ்விவகாரத்தில் தலையிடும்படி இவ்வியக்கத்தினர் இருமுறை கடிதம் எழுதி கோரியுள்ளனர்.

முன்பு ''முக்திபாஹினி'' என்ற இல்லாத அமைப்பின் பெயரில் இந்திய ராணுவம் புகுந்து பாகிஸ்தானை துண்டாடியதைப் போல, இப்போது பர்மாவிலும் தனது மூக்கை நுழைக்கிறது இந்திய அரசு. அன்னிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்று கூறிக்கொண்டே, ரகசியமாக சூழ்ச்சி-சதிகள் மூலம் ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கும் இந்திய அரசின் எத்தனிப்புகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய தருணமிது.

படிப்பகம்

www.padippakam.com

## ■ இந்தியப் படைவிலக்கம் கண்துடைப்பு
## ■ மாஜி ராணுவத்தினரின் படை திரட்டுகிறது, இந்தியா
# தீர்மானிக்கும் சக்தியாக ஜே.வி.பி.

இந்திய - இலங்கை ஆளும் பாசிச கும்பல்களுக்கு இடையில் இறுதிநேர சமரசம் ஏற்பட்டுவிட்டது. பிரேமதாசா, ராஜீவ் காந்தி ஆகியோரது 'மானம் - மரியாதை'யைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஓர் இடைக்கால ஏற்பாடுதான் இது. இரு அரசுகளுக்கிடையே கடந்த இரு மாதங்களாக நடந்துவந்த அனல் பறக்கும் அரசு தந்திரம் மற்றும் பிரச்சாரப் போரை நிறுத்திக் கொண்டு இரகசிய பேரங்களில் இறங்கியுள்ளனர். இதனால் இரண்டு நாட்டு மக்களையும் மட்டுமல்ல; அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள்.

✱ தெற்கு ஆசிய பிராந்தியத்தில் இந்தியாவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க, விரிவாக்கக் கனவுகள் கருச்சிதைவு அடைவதையும்:

✱ வடகிழக்கே ஈழ சுயநிர்ணய உரிமைப் போரையும், தெற்கே ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி)யின் 'கலக'த்தையும் ஒடுக்க முடியாமல் பிரேமதாசா அரசு வீழ்வதையும்;

- எப்பாடுபட்டாலும் அவர்களால் தடுக்கவே முடியாது!

இந்தியா - இலங்கை ஆளும் பாசிச கும்பல்களின் 'கௌரவத்துக்குப் பங்கம்' ஏற்படாத வகையில் மிகமிகச் சிறிய, மிகமிகப் பொதுவான, தெளிவற்ற அரசுதந்திர வார்த்தைகள் மூலமாக தற்போது ஏற்பட்டுள்ள சமரச ஒப்பந்தத்தை அறிக்கையாக வெளியிட்டுள்ளார்கள். இரு அரசுகளுமே தமது வசதிக்கேற்ப வியாக்கியானம் செய்து கொள்வதற்குத்தான் இந்த ஏற்பாடு!

''எனது கோரிக்கையை ஏற்று இந்தியா படைவிலக்கம் செய்துகொள்ள ஒப்புக் கொண்டுவிட்டது. அதன்மூலம், இலங்கையின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் அங்கீகரித்துள்ளது'' என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் பிரேமதாசா.

''இந்திய அரசு கடைப்பிடித்துவந்த பிடிவாதமான விடாமுயற்சி, நிதானம், புத்திசாலித்தனம் ஆகியவற்றுக்குக் கிடைத்த அரசுதந்திர வெற்றி. இதன் காரணமாக இருநாடுகளுக்கும் இடையே நேரவிருந்த அசிங்கமான மோதலைத் தவிர்த்துவிட்டோம்'' என்று அதிகாரபூர்வமாக கூறிக்கொள்கிறது, இந்திய அரசு. ஆனால் ''பிரோமதாசாவைப் பணிய வைப்பதில், நிபந்தனைகளைக் கைவிடச் செய்து பேச்சுவார்த்தைக்கு உடன்பட வைப்பதில் வெற்றி பெற்றுவிட்டோம்'' என்று பீற்றிக் கொள்கின்றன. அதன் பிரச்சார சாதனங்கள்.

இந்தியப் படைவிலக்கத்துக்கான கெடு வைத்ததில் இருந்து இலங்கை அரசு காட்டி வந்த வீராவேசத்தைப் பார்க்கும்போது, தனது கோரிக்கைகள், நிபந்தனைகள் எல்லாம் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு இணங்கிவிட்டது, அது பணிந்து போனதைத் தான் குறிக்கிறது.

'இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை அதிபர் செய்வார்' 'இந்திய இராணுவத்தை பாசறைகளுக்குள் முடங்கும்படி உத்திரவு போடுவார்' 'இலங்கை இராணுவம் சட்டஒழுங்கு அதிகாரத்தை மேற்கொள்ளும்' 'இந்திய - இலங்கை இராணுவங்களுக்கிடையே மோதல் நிலைமை உருவாகும்' 'இந்தியாவுடனான போரில் இலங்கை வெல்ல முடியாதுதான், இருந்தாலும் இலங்கையின் சுயாதிபத்தியத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கக் கடைசி குடிமகன் இருக்கும் வரை போரிடுவோம்' என்றெல்லாம் இலங்கை அரசு வீராவேசம் பேசியது. இவை அரசுதந்திரப் பிரச்சாரப் போரின் ஓர் அங்கம் என்று விட்டுவிடலாம்.

படைவிலக்கம்தான்; பேச்சுவார்த்தைக்கு இடமே கிடையாது என்று மறுத்து வந்தது. இலங்கை அரசு. ஆனால் இறுதி நாட்களில் கீழே இறங்கிப்போய், ''இலங்கையிலுள்ள எல்லாப் படைகளுக்கும் பிரேமதாசாதான் தலைமை ஆணையாளர்; புலிகளுடனான போரை - பகைமையை நிறுத்திவிடுவது ஆகிய இரு நிபந்தனைகள் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்குத் தயார்'' என்று அறிவித்தது. இறுதிநேரத்தில் இந்த இரு நிபந்தனைகளையும்கூடக் கைவிட்டு, ''இலங்கை அதிபரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு படைவிலக்கத்துக்கு ஒப்புக் கொள்வதாக கூறி ஒரு அடையாளமாக ஒரு சிறிய பிரிவை விலக்கிக் கொண்டாலும்கூட போதும்'' என்று பணிந்துவிட்டது.

அதையும் கூட, ''இலங்கை அதிபரின் கோரிக்கையை ஏற்று மீண்டும் படைவிலக்கம் துவங்குவது'' என்று சமரச வார்த்தைகளில் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். அதாவது பிரேமதாசா கோரிக்கைக்கு இந்தியா பணிந்ததைப் போலவும் இருக்கும். ஏற்கனவே படைவிலக்கம் செய்துவந்ததை சிறிதுகாலம் நிறுத்திவிட்டு மீண்டும் துவங்கியதுதான்; தனிச்சிறப்பு எதுவுமில்லை என்பதுபோலவும், இருக்கும். மீண்டும் படைவிலக்கம் எப்போது என்பது பேச்சுவார்த்தையில்தான் தீர்மானிக்கப்படும். இப்போது அடையாளமாக 600 பேரை விலக்கிக் கொண்டது கூட கண் துடைப்புத்தான். இலங்கையை ஆக்கிரமித்துள்ள இந்திய இராணுவத்தினரிடையே விரக்தி, வெறுப்பு, பயம், ஆத்திரம், கலக மனப்பான்மை குடிகொண்டுள்ளது. அதிகாரிகளுக்கு எதிரான கலகமாக கூட வெடிக்கிறது. எனவே சுழற்சி முறையில் அங்குள்ள துருப்புக்களை மாற்றிக்கொண்டே இருக்கிறது இந்திய இராணுவம். அப்படிப்பட்ட மாற்றத்தைப் போன்றதுதான் இந்த அடையாளப் படைவிலக்கம்.

இந்திய அரசு தனது நேர்மையான - அரசுதந்திர முயற்சிகளினால் தற்போதையை சமரச ஒப்பந்தத்தை சாதித்துவிடவில்லை. புலிகளுடன் பிரேமதாசா பேச்சுவார்த்தை என்றவுடன் இந்திய அரசைப் பயம் தொற்றிக் கொண்டுவிட்டது. பிரேமதாசா படைவிலக்கத்துக்கான கெடுவைத்தவுடன் அப்பயம் பீதியாகிவிட்டது. பீதியின் காரணமாக இந்தியா அடுக்கடுக்கான பல பொய்களும், அடுத்தடுத்துப் பல தவறுகளும் செய்து உலக அரங்கில் அம்பலப்பட்டுப்போனது.

✱ படைவிலக்கக் கெடுவைத்ததும், இந்தியா முதலில் சொன்ன காரணம், இராணுவ நுட்பக் காரணங்களில் குறித்த காலத்தில் விலக முடியாது என்பதுதான். பிறகு தமிழர்களின் பாதுகாப்பு, அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை நிபந்தனையாக வைத்தது: இந்தியாவின் பிராந்திய நலன்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் விலக முடியாது என்றது. இந்திய இராணுவப் பணிகளும் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் ஏறக்குறைய நிறைவேறிவிட்டதாக மே மாதம் வரை பிரச்சாரம் செய்து வந்ததுக்கு மாறாகப் பிரச்சாரம் செய்தது.

✱ இலங்கையில் உள்ள தனது அடிவருடிகளை விட்டுத் தனிஈழம் பிரகடனம் செய்வதாகவும், இந்திய இராணுவம் விலகக்கூடாது என்றும் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது. இந்தியாவிலும் கூலிப்பிரச்சாரர்களை முடுக்கிவிட்டது.

✱ முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களுக்கு எதிராக மக்கள்திரள் படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டு இனக்கலவரத்தைத் தூண்ட இந்திய இராணுவம் முயன்றது. ஈழத்தமிழ்ச் சிறுவர்களைக் கட்டாயப்படுத்தி கடத்திக் கொண்டுபோய் 'மக்கள் தொண்டர் படை' என்ற கூலிப்படைக்கு ஆள் சேர்த்தது.

✱ அமெரிக்கா, இங்கிலாந்து, ருஷ்யா என்று வல்லரசுகளிடம் இந்திய மந்திரிகளையும், அதிகாரிகளையும் அனுப்பி மண்டியிட்டு, ஆதரவு தேடியது. பிரதமர் ராஜீவே அந்த வல்லரசுத் தலைவர்களிடம் போய் ஆதரவு கோரி மன்றாடினார்.

✱ படை விலக்கக் கோரிக்கையில் இலங்கை வலிந்து நின்றபோது, இந்தியாவே வலியப்போய் பேச்சுவார்த்தைக்கு வரும்படி கெஞ்சியது; பிறகு மிரட்டியது.

✱ அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், உமாமகேஸ்வரன் ஆகியோரது கொலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், பிரபாகரன் கொலை பற்றிய வதந்தியையும் பரப்பவும் கேவலமான பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

✱ இன்னொரு சுயாதிபத்திய, சுதந்திர நாட்டின் தலைவர்களைப் பற்றி பிரதமர் ராஜீவ் மிரட்டுவதாகவும் அவதூறாகவும் தரக்குறைவான தாக்குதல்களை நடத்தினார்.

✱ தெற்கு ஆகிய பிராந்தியக் கூட்டமைப்பு (சார்க்) கலைந்துபோகும் அளவு சிதைத்தது உட்பட உலக அரங்கில் இந்தியா கடும் கண்டனத்துக்குள்ளானது.

✱ இந்தியா தெற்கு ஆசியாவில் பிராந்திய வெறிபிடித்த ஆதிக்க சக்தியாக மாற முயற்சிக்கிறது என்று பகிரங்கமான குற்றச்சாட்டுக்கு ஆளாகியது. இந்திய அரசே பல முறை மறுக்கவேண்டியதாகியது.

படிப்பகம்

www.padippakam.com

✱ இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்கும்படியும், இந்தியர்களை வெளியேறும்படியும் ஜே.வி.பி. கெடுவைத்தபோது, பீதியுற்றுப் போய் நட்சத்திர விடுதிகளுக்குள் தஞ்சம் புகும்படி, இந்தியர்களுக்கு உத்தரவு போட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இறுதி நாட்களில் இலங்கையின் மீது முழு அளவு போர் தொடுப்பதற்காகப் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்தது : ஏற்கனவே ஈழத்தில் உள்ள 50,000 இராணுவத்தினர் (உண்மையில் ஒரு லட்சம் பேர் உள்ளனர்) போதாதென்று மேலும் 25,000 துருப்புக்களை தமிழ்நாட்டில் தயார் நிலையில் வைத்தது ஜாகுவார், மிரேஜ், மிக்-23 ஆகிய அதிநவீன ராட்சதக் குண்டுவீசும் நான்கு அணி விமானங்கள் தயார் நிலையில் வைத்தது. ஐ.என்.எஸ். விராட் என்ற விமானந்தாங்கிக் கப்பல் உட்பட பல போர்க்கப்பல்கள், தாக்குதல் படகுகள் தாக்குவதற்குத் தயார் நிலையில் தென்னிலங்கையைச் சுற்றி, குறிப்பாக கொழும்புவைக் குறிவைத்து நிறுத்தப்பட்டது. கொழும்பு நகருக்குள் புகுந்து அதிரடித் தாக்குதல் நடத்துவதற்காகத் தனிப்பயிற்சி பெற்ற இராணுவப் பிரிவு ஒரு கப்பலில் நிறுத்தப்பட்டது.



பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் ஜே.வி.பி. இயக்கத் தலைவர் ரோகண விஜயவீரா.

இதையும்விட முக்கியமாக, 5,27,000 மலையகத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களைப் பணயக் கைதிகளாக வைத்து இலங்கைப் போரை நடத்தத் தீர்மானித்தது. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொள்ளும் அதே உத்தி. தமது நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்கப் போரில் ஈடுபடுவதாகக் கூறித் தாக்குவது என்று முடிவு செய்திருந்தது.

ஆகவே, நேர்மையான அரசுதந்திர முயற்சிகளுக்கு மாறாக, அக்கிரமமான, அநீதியான பல மிரட்டல்கள், நாசவேலைகள் மூலமாக பணியும்படி பிரேமதாசாவை நிர்பந்தித்தது.

ஆனால் பிரேமதாசா சமரசத்துக்கு உடன்பட்டதற்கு இவைகூட காரணங்கள் அல்ல. படை விலக்கத்துக்கு மறுத்துவிட்டு போர்த் தயாரிப்பில் இந்தியா இறங்கிவிட்டது. இவ்வளவு பெரிய இராணுவ வல்லரசுக்கு எதிராக மிகச்சிறிய இலங்கை நேரடிப் போரில் இறங்குவது தற்கொலையாகும்; எனவே முறையான - கிரமமான போருக்குப் பதில் கொரில்லா, ''நாசவேலை'', போன்ற இரகசியப் போர் நடத்துவதும், சர்வதேச அரங்கில் பிரச்சாரம் செய்வதும்தான் வழி!

சர்வதேச அரங்கிலே பிரச்சாரம் என்பது களத்திலான போரில் பெரிதும் சாதகமான நிலைமையைத்தராது. மாறாக மேலும் மூர்க்கமாக இந்தியா தாக்கக்கூடும். எனவே முறையற்ற - கிரமமற்ற போர் தான் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒரே தீர்க்கமான வழி. அப்படிப்பட்ட போரை நடத்துவதற்கு ஜே.வி.பி.யும் புலிகளும் தான் தயாராய் உள்ளனர். ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் ஆயுத உதவி உட்பட அனைத்து வகைகளிலும் அவர்களுடன் ஒத்துழைக்க மறுப்பது பிரேமதாசா கும்பலை மேலும் தனிமைப்படுத்திவிடும். ஆனால் ஆயுதம் முதலிய உதவிகளைத் தருவதால் ஜே.வி.பி.யும் புலிகளும் மேலும் பலம் பெற்று வளர்ந்துவிடுவதோடு இலங்கை இராணுவத்துக்குள் ஊடுருவி ஆதரவு திரட்டிக் கொண்டுவிடுவது மேலும் எளிதாகிவிடும். அப்படிப்பட்ட போக்கு இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக மட்டுமின்றி பிரேமதாசா கும்பலுக்கும் எதிராகவே திரும்பிவிடும். ஜே.வி.பி.யும் புலிகளும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கு கூடுதலான வாய்ப்பாகிவிடும்.

இந்திய ஆக்கிரமிப்பு - ஆதிக்க, விரிவாக்க இராணுவம், ஜே.வி.பி. 'கலக'ப் படை ஆகிய இரு ஆயுதந்தாங்கிய சக்திகளுக்கிடையே சிக்கிக் கொண்டுள்ளது பிரேமதாசா கும்பல். இந்தியப் படைவிலக்கம் செய்வதன்மூலம் ஜே.வி.பி.யிடமிருந்து முன்முயற்சியையும், மக்கள் ஆதரவையும் பறித்துவிட அது முயன்றது. ஆனால் இந்தியா தனது ஆக்கிரமிப்பு - ஆதிக்க, விரிவாக்க நோக்கங்களில் பிடிவாதமாக நிற்கிறது. அதேசமயம் இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு - இந்தியர் வெளியேற்ற உத்தரவு, போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம், ஊரடங்கு உத்திரவு ஆகிய போராட்டங்கள் மூலம் ஜே.வி.பி.யின் சக்தி பூதாகரமாக, தனது ஆட்சியை அச்சுறுத்துவதாக வளர்ந்துவிட்டதைக் காண்கிறது, பிரேமதாசா கும்பல். அதனால்தான் இந்தியாவுடன் திடீர் சமரசத்துக்கு இணங்கியுள்ளது.


1971 இல் எந்த ஜே.வி.பி. இயக்கம் அபாயகரமானது, அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று இங்கிலாந்து, இந்தியா உட்பட ஏழு நாட்டுப் படைகளை ஏவினார்களோ, அதே ஜே.வி.பி. இப்போது போட்டி அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. படைவிலக்க கெடுவின் இறுதி மூன்று நாட்கள் கண்டதும் கடும் ஊரடங்கு உத்தரவையும் மீறி பல நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்களை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியது. 300 பேர்கள் மாண்ட போதும் போராட்டம் ஓயவில்லை. அடுத்த இரண்டு நாட்கள் ஜே.வி.பி.யே வெற்றிகரமாக ஊரடங்கு நடத்தியது.

அதிசயக்கத்தக்க திடீர் தலையீடு இல்லாத பட்சத்தில் பிரேமபதாசா அரசை வீழ்த்திவிட்டு ஜே.வி.பி.யின் ''சமூக பாசிச, தேசிய வெறி சோசலிச'' அரசு நிறுவப்படுவதை யாராலும் தடுக்க முடியாது. அது தெற்கு ஆசியாவில் ஒரு அரசு பயங்கரவாத இயக்கமாகி, ''புரட்சி''யை ஏற்றுமதி செய்யும் என்கிற யதார்த்தத்தை உலக வல்லரசுகள், குறிப்பாக இந்தியா காண மறுக்கிறது.

பிரேமதாசாவும் ராஜீவும் இப்போது நடத்தும் பேச்சுவார்த்தைகள் மூலமாககூட அவர்களுக்குள்ளும் ஒரு சமரசத் தீர்வைக் காண்பது சாத்தியமில்லை. ஏனெனில் புலிகளுடன் சமரசம் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஈடாக அவர்களுக்குத் தருவதற்கான ''அரசியல் சன்மானம்'' எதுவும் இந்திய - இல்ஙகை அரசுகளிடம் கிடையாது. ஈழத்தில் உள்ள இந்திய அடிவருடிகளைப் பலியிட்டுத்தான் இந்தியா எதையும் தரமுடியும். அப்போதும் இந்தியா தனது ஆக்கிரமிப்பு - ஆதிக்க, விரிவாக்க நலன்களை விட்டுக் கொடுத்து, படைகளை முற்றாக விலக்கிக் கொள்ளாது. அப்படி படைவிலக்கம் தவிர்க்கமுடியாதானால் தனது ஆக்கிரமிப்பு - ஆதிக்க, விரிவாக்க நலன்களுக்காக போரிடும் நோக்கத்தோடு ஈழத்திற்கு அனுப்புவதற்காக மாஜி ராணுவத்தினரை கொண்டு படை திர்ட்டுகிறது ராஜீவ் கும்பல். ஏற்கனவே அடிவருடிகளின் படையையும் அங்கே உருவாக்கியுள்ளது.

ஜனநாயகம், சமத்துவம் அடிப்படையில் நாடுகள், தேசங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதைத் தவிர வேறுவழி கிடையாது. இந்திய - இலங்கை பாசிச ஆளும் கும்பல்கள் அதற்கு ஒரு போதும் சம்மதிக்கமாட்டா. எனவே ஆக்கிரமிப்புக்கு எதிராக தேச பக்தப் போரும், தேசிய இன விடுதலை உட்பட பாசிசத்துக்கெதிரான ஜனநாயகப் புரட்சியும் வெற்றிபெறும் வரை இந்த நெருக்கடிகள் தொடரும்.

www.padippakam.com




# 'அக்னி'க்குப் பாராட்டு! விஞ்ஞானிகளுக்கு அவமரியாதை!

அக்னி ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதும் பாசிச ராஜீவ் கும்பல் ஆகா, ஓஹோ என்று விஞ்ஞானிகளுக்குப் புகழ் மாலை சூட்டியது. ''சுயசார்பான அரிய முயற்சி; அபார சாதனை; ஏகாதிபத்தியங்களுக்குச் சவால் விடுமளவுக்கு மாபெரும் முன்னேற்றம்; இராணுவ ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் மிகப் பெரிய வெற்றி!'' என்று பாராட்டு மழை பொழிந்தது.

'அக்னி'யை வடிவமைத்து வெற்றிகரமாக விண்ணில் ஏவ அரும்பாடுபட்ட விஞ்ஞானிகளையும் தொழில் நுட்பவாதிகளையும் எதிர்க்கட்சியினரிலிருந்து அனைத்து புத்திரிக்கைகளும் பாராட்டி உச்சி முகர்ந்தன. சாதனை புரிந்த இந்த விஞ்ஞானிகள் பரிசுகளும் பதவி உயர்வும் அளித்து கௌரவிக்கப்படுவார்கள் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் நடந்ததே வேறு. அரிய சாதனை புரிந்த அனைத்து விஞ்ஞானிகளும் அவமதிக்கப்பட்டுள்ளனர்; அவமானப் படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கிரமமான முறையில் தரப்பட வேண்டிய பதவி உயர்வு - தகுதி உயர்வு கூட மறுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். அதே சமயம் தகுதியற்ற, கூழைக் கும்பாடு போடும் பல விஞ்ஞானிகளுக்கு பதவி - தகுதி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

'அக்னி'யை வடிவமைத்த தலைமை விஞ்ஞானி அப்துல் கலாம் இந்த அவமானத்தை எதிர்த்து, ''அக்னி ஆராய்ச்சித் திட்டத்தில் வெற்றி கண்டு சாதனை புரிந்த விஞ்ஞானிகள் எவ்வாறு தகுதி குறைந்தவர்களாகி விடுவார்கள்?'' என்று விளக்கம் கேட்டபோது. ''இதுதான் நிர்வாக முறை'' என்று ஆணவத்தோடு கூறியுள்ளது, இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO). ''கலாம் செல்வாக்கு மிக்க விஞ்ஞானியாக இருக்கலாம்; ஆனால் பதவி உயர்வு - தகுதி உயர்வைப் பொறுத்தவரை எங்கள் முடிவுதான் இறுதியானது'' என்று கொக்கரிக்கிறார், இவ்வமைப்பின் தலைமையிலுள்ள முக்கிய புள்ளியான 'கே.என். சிங்.

''இந்த அவமானம் அக்னி ஏவப்பட்ட பிறகுதான் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது முன்னமே நடந்திருந்திருந்தால் அக்னி திட்டம் தோல்வியில் தான் முடிந்திருக்கும்'' என்று வெளிப்படையாக பொருமுகிறார் 'அக்னி' குழுவைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி. அற்ப விஷயங்களுக்குக்கூட ஏகாதிபத்தியங்களின் தயவுக்காக காத்திருக்கும் வேளையில், உள்நாட்டு தொழில் நுட்பத்தைக் கொண்டே 'அக்னி'யின் வெப்பக் கேடய உலோகக் கூட்டினை உருவாக்கிய விஞ்ஞானிகள் எந்த அளவுக்கு வேதனையடைந்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தும் குமறல் தான் இது. பதவி - தகுதி உயர்வு மறுக்கப்பட்டது 'அக்னி' விஞ்ஞானிகளுக்கு மட்டுமல்ல; பாதுகாப்புத் துறையைச் சார்ந்த பல விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் தொழில் நுட்பவாதிகளும் முறையான பதவி உயர்வு தராப்படாமல் உதாசீனப்படுத்தப் பட்டுள்ளனர்.

★ ஏவுகணை ஆராய்ச்சிப் பிரிவிலுள்ள 40 இளநிலை விஞ்ஞானிகள் 'பி' கிரேடு தகுதி உயர்வு கோரி விண்ணப்பித்திருந்தனர். அத்தனை பேரையும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் மதிப்பீட்டு மையம் புறக்கணித்து விட்டது. முதுநிலை விஞ்ஞானிகளான 8 'ஈ' கிரேடு விஞ்ஞானிகளுக்கு உரிய தகுதி உயர்வு அளிக்கப்படவில்லை.

★ பிரதான யுத்தமுனை டாங்கி (MBT) ஆராய்ச்சி துறையில், சென்னை - ஆவடி டாங்கி தொழிற்சாலையிலுள்ள, பலமுறை படுதோல்வி கண்ட இணைப்பு பிரிவின் மேலாளராக இருந்த நடராஜன் என்ற விசுவாசிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு இதர தலைமை விஞ்ஞானிகளும், இரண்டாம்தர இராணுவ அதிகாரிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இத்துறையில், முக்கியமாக, நடராஜனை விட மூத்த அனுபவமிக்க, திறமையான ராணுவ அதிகாரியான பிரிகேடியர் டிமோத்தி மேடக்கிலுள்ள காலாவதியான டாங்கி [illegible]லைக்கு விரட்டப்பட்டார். பணிக்காலம் முடியுமுன்னரே அவருக்கு பணி ஓய்வு அளித்து விரட்ட முயற்சி நடக்கிறது.

★ இலேசு ரக போர் விமான ஆராய்ச்சிப் பிரிவில் கே.ஜி.நாராயணன் என்ற அடிவருடிக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வு பல விஞ்ஞானிகளுக்கு எரிச்சலூட்டியுள்ளது. இருமுறை 'எஃப்' கிரேடுக்கான தேர்வில் தோல்வி கண்ட அவரை 'ஜி' கிரேடுக்கு நேரடியாக உயர்த்தியதோடு, பெங்களூர் போர் விமான ஆராய்ச்சித் துறை தலைவராகவும் நியமித்துள்ளது, மதிப்பீட்டு மையம்.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் இதர மூன்று துறைகளிலும் இதே கதைதான். சாதனை புரிந்த விஞ்ஞானிகள் புறக்கணிக்கப்பட்டு, அதிகார வர்க்கத்துக்கு சாமரம் வீசும் விஞ்ஞானிகளுக்கு பதவி - தகுதி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. மாட்டு வைத்தியரை மனுஷனுக்கு வைத்தியம் பார்க்கச் சொன்னால் எப்படியிருக்கும்? அதில் தவறொன்றுமில்லை என்று தமது விசுவாசிகளுக்கு பதவி - தகுதி உயர்வு அளித்து கௌரவித்துள்ளது ஆராய்ச்சித் துறையின் அதிகார வர்க்கம்.

இதன்படி, இயந்திரவியல் பொறியாளரான எம்.பி.சிங், விவசாய மற்றும் மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராக்கப்பட்டுள்ளார். ருக்மிணி சங்கரன் என்ற நுண்ணுயிரியல் விஞ்ஞானி மைசூரைச் சார்ந்த உணவு ஆராய்ச்சி பரிசோதனைக்கூட இயக்குநராக்கப்பட்டுள்ளார். 'ஈ' கிரேடு பத்தாவது நிலையிலிருந்த செல்வமூர்த்தி என்ற விஞ்ஞானி டெல்லி கண்டோன்மென்டின் ராணுவத்தினரின் உடலமைப்பு மற்றும் அது தொடர்பான விஞ்ஞானத்துறையின் தலைவராக்கப்பட்டுள்ளார். இப்படி தகுதியற்ற, குறிப்பிட்ட துறைக்கு அறவே சம்பந்தமில்லாத, வாலைக் குழைக்கும் பல விஞ்ஞானிகளுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டள்ளது.

என்றைக்கு மதிப்பீட்டு மையம் அதிகார வர்க்க ஆணவ கும்பலின் கைக்கு வந்ததோ அன்றிலிருந்தே லஞ்ச ஊழலும், ஓரவஞ்சனைகளும் ஆரம்பித்து விட்டன. இதற்கு முன் பொதுத் தேர்வாணையம் மூலமாக விஞ்ஞானிகளுக்கு முறையாக பதவி - தகுதி உயர்வு அளிக்கப்பட்டு வந்தது. 1985ல் வேலைப் பளு காரணமாக மதிப்பீடு செய்யும் பொறுப்பை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பிடம் மாற்றிக் கொடுத்தது. இவ்வமைப்பு, புதிதாக விஞ்ஞானிகள் சேர்ப்பு மற்றும் மதிப்பீட்டு மையம் என்ற அமைப்பை உருவாக்கி, ராணுவ மந்திரியின் ஆலோசகரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இவ்வமைப்பைக் கொண்டு வந்தது. அதன் பிறகு ராணுவ மந்திரியும் அவரது ஆலோசகர்களும் வைத்ததுதான் சட்டமாகியது. இந்த அதிகார வர்க்க அமைப்பினால் பழிவாயங்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்ட பல விஞ்ஞானிகள் இதற்கெதிராக பாசிசப் பிரதமர் ராஜீவிடமே பல முறை விண்ணப்பித்தும் கூட, அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தகுதி வாய்ந்த பல விஞ்ஞானிகளுக்கு ஏன் பதவி உயர்வு தரப்படவில்லை என்று இராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்

படிப்பகம்

www.padippakam.com

துறையின் முக்கிய புள்ளியான கே.என்.சிங்கிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்ட போது, ''சில கிழம் கட்டைகளுக்கு பதவி உயர்வு தரப்படவில்லை என்பது உண்மைதான். தொழில் நுட்ப ரீதியில் முன்னேறிய ஒரு சமுதாயத்தை நாம் படைக்க வேண்டுமானால் இவர்களைப் புறக்கணிப்பதில் தவறில்லை. திறமையான இளம் விஞ்ஞானிகளுக்கு வழி விட வேண்டியது அவர்களது கடமையாகும்'' என்று அதிகார வர்க்க ஆணவச் செருக்குடன் கூறுகிறார்.

தகுதி வாய்ந்த பல விஞ்ஞானிகள் புறக்கணிக்கப்படுவதற்கு உண்மையான காரணம் அதுவல்ல. அதிகாரிகளின் பேச்சுக்கு ஆமாம்சாமி போடும் போலீஸ்காரனைப் போல, தலைமை விஞ்ஞானிகள் 'புதிய கண்டுபிடிப்பு' என்ற பெயரில் நடத்தும் பித்தலாட்டங்களுக்கு அவர்கள் ஆமாம்சாமி போடவில்லை. கூழைக் கும்பாடு போட்டு பல்லிளிக்க விரும்பவில்லை. சில மக்கள் விரோத ஆராய்ச்சிகளை அம்பலப்படுத்தவும் செய்தனர்.

''பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ள விஞ்ஞானிகள் புத்தக - கோட்பாட்டுத் தேர்வுகளில் சிறந்தவர்களாக இருக்கலாம். ஆனால் சோதனைக்கூட செயல்பாடுகளுக்கு எந்த தொடர்புமில்லாத ஒருவரை எப்படி அறிவுக் கூர்மையானவர் என்று மதிப்பிட முடியும்? இத்தகையவர்கள் துறைத் தலைவர்களாகிவிட்டால் அப்புறம் ஆராய்ச்சி உருப்பட்ட மாதிரிதான்!'' என்று ஏளனம் செய்கின்றனர் இதர விஞ்ஞானிகள்.

ஏன், எதற்கு என்று கேட்பது விஞ்ஞானிகளின் அரிச்சுவடி. புதியவற்றை ஆராய்வதால் ஆர்வம் அவர்களது உடன்பிறப்பு. ஜனநாயக உணர்வு அவர்களது இயல்பு. ஆனால் அவர்களை அதிகார வர்க்கத் தோரணையில் கிள்ளுக் கீரையாக நினைத்து அவமானப்படுத்துகிறது; அடக்குகிறது பாசிச கும்பல். அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டு உயரதிகாரிகளால் அவர்கள் மிரட்டப்படுகின்றனர்; பழி வாங்கப்பட்டு விரட்டப்படுகின்றனர். தன் மானமுள்ளவர்கள் எதிர்த்துப் போராடுகிறார்கள். இயலாதவர்கள் மன நோயாளிகளாகிறார்கள். தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். விரக்தியடைந்தவர்கள் மேலை நாடுகளுக்குப் போய்விடுகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு ஐதராபாத்தைச் சேர்ந்த அணு எரிசக்தி நிலையத்தின் மண்ணியல் ஆய்வுத்துறை தலைமை விஞ்ஞானியாக இருந்த கான், அணு எரிசக்திக் கழிவினால் ஐதராபாத்தின் நிலத்தடி நீர் நஞ்சாகி விட்டதை அம்பலப்படுத்தியதால் பாசிச கும்பல் அவரை பைத்தியம் என்று அவமானப்படுத்தியது. விரக்தியடைந்த அவர் பதவியைத் துறந்து, இன்று அந்நகரத்திலேயே துணிக்கடை வியாபாரியாக மாறி விட்டார். பாசிச கும்பலின் அதிகார வர்க்க ஆணவம் - அடக்குமுறையால் இன்று பல நூறு விஞ்ஞானிகள், கான் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். இந்த லட்சணத்தில் நாட்டை 21-ம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்லப் போவதாகப் பம்மாத்து செய்கிறது பாசிச கும்பல். வெட்கக்கேடு! ◆ குமார்.



## இளஞ்சிறுமி கற்பழித்துக் கொலை!

## தொடரும் நிலப்பிரபுத்துவ வெறியாட்டங்கள்!

தஞ்சைக்கு வடமேற்கே வெண்ணாறும் வெட்டாறும் பிரியும் இடத்தில் அமைந்துள்ள கிராமம் வெள்ளாம் பெரம்பூர். கணவனால் கைவிடப்பட்ட விஜயாம்பாள் இக்கிராமத்தில் கூலி வேலை செய்து தன் நான்கு குழந்தைகளையும் காப்பாற்றி வருபவர்.

கடந்த ஜூன் 3ந் தேதியன்று அவர் ஊருக்கு சற்று தள்ளி இருக்கும் களத்து மேட்டில் பதரைக் கூட்டி தூற்றிக் கொண்டிருந்தார். அவருடைய மகள் - 12 வயது கூட நிரம்பாத ராதா பக்கத்து வயல்களில் சாணம் பொருக்கிக் கொண்டிருந்தாள். தன் வேலையிலே மூழ்கிப் போன விஜயம்பாள் தம் மகளை நீண்ட நேரமாக கவனிக்கவில்லை. பின்னர் அவளைக் காணாமல் தேடியிருக்கிறார். மகள் வைத்திருந்த கூடையும் சாணமும் மட்டும் கிடக்க, பயத்துடன் வயல்வெளியில் சப்தம் போட்டு கூப்பிட்டும் பதில் வரவில்லை. இறுதில் தம் மகள், புதர் ஒன்றில் உடைகள் கிழித்தெறியப்பட்டு, உடல் முழுவவதும் இரத்தம் சொட்ட, பற்களாலும் நகத்தாலும் கொத்திக் குதறப்பட்ட நிலையில் பிணமாகக் கண்டார்!

பயத்தாலும் அதிர்ச்சியாலும் தாக்குண்ட அவர் அழுது அலை மோதிக் கொண்டு ஊரில் போய் முறையிட, ஊர் மக்கள் திரண்டு வந்து பார்த்து உடனே போலீசுக்குத் தகவல் அனுப்பினர்.

போலீசார் இக்கோரமான கற்பழிப்புக் கொலையைத் துப்பு துலக்க மோப்ப நாயுடன் வந்தபோது, அது அருகிலுள்ள பனவெளி கிராமத்தின் நிலப்பிரபுவும், பெண் பித்தனும் குடிகாரனுமாகிய திருவேங்கடம் என்கிற திருநாவுக்கரசுக்குச் சொந்தமான பம்புசெட்டைச் சுற்றி வந்து அடையாளம் காட்டியது. அங்கே அவனது ரத்தக் கறை படிந்த பாலியஸ்டர் வேட்டி கண்டறியப்பட்டது. பின்னர் அவன் வீட்டிற்கும் சென்று மோப்ப நாய் அடையாளம் காட்டியது.

இதற்கிடையே திருநாவுக்கரசு தலை மறைவாகிவிட்டான். போலீசார் அவனது வேலைக்காரனைக் கைது செய்ததும், அதையே சாதமாக்கிக் கொண்டு, குற்றத்தை அவனே ஒப்புக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்துவிட்டான். தனக்கு பதிலாக குற்றத்தை ஒப்புக் கொண்டால் உடனே ஜாமீனில் விடுவிக்க ஏற்பாடு செய்வதாகவும், இனாமாக ஒரு ஏக்கர் நிலம் தருவதாகவும் தனது வேலைக்காரனுக்கு ஆசை காட்டியதோடு, மறுத்தால் உன்னையும் கொன்று விடுவேன் என்று மிரட்டிப் பணிய வைத்துள்ளான்.

கீழ்பட்டம் முதல் மேல் மட்டம் வரை போலீசுக்கு பணத்தை வாரியிறைத்து இவ்வளவு காரியங்களையும் சாதித்துக் கொண்டுள்ளான், அந்த நிலப்பிரபு. அவன் உடலில் காயங்கள், கீறல்கள் இருந்த போதும், போலீஸ் நிலையத்தில் மோப்ப நாய் அவனைக் கவ்விப் பிடித்து காட்டிக் கொடுத்த போதும் கூட, கையூட்டு பெற்ற போலீசார் அவனைக் கைது செய்ய வில்லை. ஆத்திரமடைந்த ஊர் மக்கள் கொதித்தெழுந்து போலீசாரை நிர்பந்தித்த பிறகு, வேறுவழியின்றி போலீசார் அவனைக் கைது செய்தனர். போலீஸ் நிலையத்தில் அவனுக்கு ராஜ உபசாரம் செய்து வரும் டி.எஸ்.பி.கணேசன், இன்ஸ்பெக்டர் காத்தமுத்து, சப்-இன்ஸ்பெக்டர் காதர் ஆகியோரைக் கொண்ட போலீசு கும்பல் இப்போது அவனை வழக்கிலிருந்து விடுவிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

மகளைப் பறிகொடுத்த தாய்க்கு துணையாக நிற்கும் ஊர் மக்கள், முதல்வர், கலெக்டர் மற்றும் போலீஸ் உயரதிகாரிகளுக்கு புகார் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சோறு இல்லை, வீடு இல்லை என்பது மட்டுமல்ல; உழைக்கும் மக்கள் மானத்துடன் வாழக் கூட இந்த நாட்டில் வழி இல்லை. நிலப்பிரபுத்துவ நீசர்களின் காம வெறிக்கு, கொலை வெறிக்கு எத்தனையோ விவசாயப் பெண்கள் பலியாகியிருக்கிறார்கள். ஆனால் இப்போது இளம் சிறுமிகளையும் கூட கற்பழித்துக் கொல்லுமளவுக்கு நிலப்பிரபுக்களின் கொட்டம் பெருத்துவிட்டது. அதற்கொரு இரத்த சாட்சிதான் சிறுமி ராதா கற்பழிப்புக் கொலை!

— தகவல்: இராமு.

படிப்பகம்

www.padippakam.com

இந்திய அரசின்

# இலங்கை ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழகம் தழுவிய இரு வார பிரச்சார இயக்கம்



✱ இலங்கை மீதான இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக இருவார பிரச்சார இயக்கத்தை கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி சிறப்பாக முன்னெடுத்துச் சென்றது. இலங்கைப் பிரச்சினை பற்றி எந்தவிதமான அறிதலும் புரிதலுமில்லாதிருந்த கிராமப்புற மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தும் விதமாக பகுதி முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, கிராமம் கிராமமாக பிரசுரம் விநியோகித்து, ஒலிபெருக்கி மூலம் முழக்கங்களும் விளக்கவுரையும் கொடுத்து பிரச்சாரம் செய்யப்பட்டது.

பின்னர் மைய நகரமான சங்கராபுரத்தில் ஜூலை 15-ந் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் சி[illegible]புரையாற்றிய தோழர் மோகன், இலங்கையை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடனேயே இந்திய அரசும் உளவு நிறுவனமான "ரா"வும் ஆரம்பத்திலிருந்தே எடுத்த திரைமறைவுச் சதிகளை அம்பலப்படுத்தினார். புரட்சியாளர்கள் மட்டுமின்றி தேசபக்த சக்திகள் அனைத்தும் அணிதிரண்டு இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து முறியடிக்க வேண்டுமென எழுச்சியூட்டும் வகையில் அறைகூவல் விடுத்தார். நிகழ்ச்சியின் இறுதியில் இலங்கை பிரச்சினையைச் சித்தரிக்கும் சிறு நாடகம் நடத்தப்பட்டது. திரளாக மக்கள் பொதுக்கூட்டத்தை ஆர்வமுடன் கவனித்தனர்.

'இலங்கையிலிருந்து இந்திய ராணுவத்தை திரும்பப்பெறு!'

என வலியுறுத்தி

## மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

ஜூலை 20

**விவசாயிகள் விடுதலை முன்னணி**

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**

✱ இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக, 20ந் தேதியன்று சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் அணிதிரண்டு ஆர்ப்பரித்த முழக்கங்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு முன் சங்கராபுரம் கடைவீதியில் சிறப்பானதொரு ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வல முகப்பில் டயர் வண்டியில் இந்திய ராணுவ சிப்பாய் ஒருவன் ஈழத்தமிழனின் பிணத்தின் மீது பூட்ஸ் காலை



வைத்துக் கொண்டு இயந்திரத் துப்பாக்கியால் எதிரே குறிபார்ப்பது போல தோழர்கள் காட்சி விளக்கமளித்தனர். இக்காட்சியை நடித்துக் காட்டிய தோழர்கள் சிறப்பாக செய்ததால், காட்சி உயிரோட்டமாகவும் 'அமைதி'ப் படையை மக்கள் புரிந்து கொள்ளவும் எளிதாக இருந்து, அவர்களின் ஆதரவைப் பெற்றது.

✱ ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிரான இருவார பிரச்சார இயக்கத்தை மக்கள் கலை இலக்கியக் கழகம் வேலூர் பகுதியில் முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றது. வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் செய்ததோடு, பேருந்து நிலையத்தில் முழக்கங்களை பெரிதாக எழுதி அணிந்து கொண்டு பிரச்சாரம் செய்தபோது மக்கள் வரவேற்றனர். ஜூலை 20-ம் தேதியன்று வேலூர் தலைமை அஞ்சல் நிலையம் அருகே இந்திய கொலைவெறி ராணுவத்தைத் திரும்பப் பெறக்கோரி விண்ணதிர முழக்கங்களுடன் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

✱ நெய்வேலி - வடலூர் பகுதியில், ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிராக தொழிலாளர் பிரச்சாரக்குழு இருவார பிரச்சார இயக்கத்தை சிறப்பாக நடத்தியது. ஜூலை 20 அன்று நெய்வேலி முதல் பிரிவு அனல் மின் நிலையத்திலிருந்து, எழுச்சிமிகு ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தின் முடிவில் வட்டம் 19ல் உள்ள அஞ்சல் நிலையத்தின் முன்பு எழுச்சிமிகு முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

✱ இந்த ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஆதரவளிக்குமாறு தி.க; தி.மு.க; 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்புகள், இந்திய மார்க்சிய பொதுவுடமைக் கட்சி (எம்.சி.பி.ஐ), உலகத் தமிழர் கழகம், விடுதலைப் புலிகள் தோழமைக் கழகம் ஆகிய அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்தும்கூட யாரும் வரவில்லை. உ.த.க; வி.பு.தோ.க போன்ற அமைப்புகளில் உள்ளவர்கள் தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் தமது கட்சித் தலைமைக்குப் பயந்து வரஇயலாது என்று கூறிவிட்டனர். பங்கேற்றால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று பீதியடைந்தனர். அடிமட்ட அணிகள் உணர்வோடு இருந்தாலும் மேல்மட்டம் அவர்களைக் காயடித்து வைத்திருப்பதை இந்நிகழ்ச்சி தெளிவாகவே நிரூபித்துள்ளது.

✱ இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக் இருவார பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட கடலூர் மக்கள் கலை இலக்கியக் கழகம், ஜூலை 17ந் தேதியன்று மஞ்சைநகர் தண்ணீர் தொட்டி அருகே பொதுக்கூட்டத்தை நடத்தியது. சிறப்புரையாற்றிய உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியின் தோழர் கே.பி.ராமசாமி, கழகங்களின் சந்தர்ப்பவாத போக்குகளையும், போலிக் கம்யூனிஸ்டுகளின் ஈழ துரோக நிலைப்பாடுகளையும் அம்பலப்படுத்திக் காட்டினார். கூட்டத்தின் இறுதியில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

✱ அடுத்த கட்டமாக, ஜூலை 20 அன்று மாலை 5 மணியளவில் ராஜீவின் விஸ்தரிப்பு நோக்கங்களை அம்பலப்படுத்தும் கேலிச்சித்திரங்களுடனும் விண்ணதிர முழக்கங்களுடனும் கடலூர் மஞ்சை நகர் தண்ணீர் தொட்டி அருகிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் இரயில்வே அஞ்சல் பிரிப்பக அலுவலகத்தை (ஆர்.எம்.எஸ்) சென்று அடைந்தது. அங்கு சிறப்பான முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தில் வடலூர் - நெய்வேலி தொழிலாளர் பிரச்சாரக்குழு தோழர்களும், மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திராவிட கழகங்கள் தங்கள் குரலை அடக்கி வாசிக்கும் இன்றைய சூழ்நிலையில், ம.க.இ.க. மேற்கொண்ட இந்த இயக்கம், கழகத் தொண்டர்கள் உட்பட மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

✱ ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிராக சென்னை மக்கள் கலை இலக்கியக் கழகம் மின்சார ரயில்களிலும் தொழிலாளர் குடியிருப்பு பகுதியிலும் விரி

படிப்பகம்

www.padippakam.com

வாக இருவார பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. ஜூலை 20 அன்று மாலை அயனாவரம் பேருந்து நிலையத்திலிருந்து வான்முட்டும் முழக்கங்களுடன் புறப்பட்ட ஊர்வலம் ஜாயிண்ட ஆபீஸ் வந்தடைந்தது. அங்கு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்கள் ஆர்வத்துடன் இந்த ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தை வரவேற்றனர். ஆக்கிரமிப்பை வெளிப்படையாக எதிர்க்க இயலாத நிலையிலுள்ள போலீசாரில் சிலர் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கிளை அமைப்பாளரிடம் வந்து உற்சாகத்துடன் கைகுலுக்கி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

✱ அன்று மாலை 7 மணியளவில் வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகே பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறப்புரையாற்றிய கிளை அமைப்பாளர் தோழர் சீனிவாசன் இந்திய கொலை வெறி ராணுவம் ஏன் வெளியேற்றப்பட வேண்டும் என்பதை ஆவேசத்துடன் விளக்கினார். 5000 ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது வாய் மூடிக்கிடந்த அரகம் பத்திரிக்கைகளும், இன்று ஈழத்தின் ம.பொ.சியான அமிர்தலிங்கம் கொல்லப்பட்டதும் ஒப்பாரி வைப்பதை எடுப்பாக தோலுரித்துக் காட்டினார், புதிய ஜனநாயகம் ஆசிரியர், தோழர் மதியழகன். ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட பகுதிவாழ் மக்கள் கலந்து கொண்டு இப்பொதுக்கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

✱ இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மதுரை மக்கள் கலை இலக்கியக் கழகம் மேற்கொண்ட இருவார பிரச்சார இயக்கத்தின் போது, ஜூலை 15ந் தேதியன்று மதுரை சம்மட்டிபுரத்தில் எழுச்சிகரமாக பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறப்புரையாற்றிய விவசாயிகள் விடுதலை முன்னணியின் தோழர் கே.பி.இராமசாமி, தோழர் இராம.துரைமாணிக்கம் ஆகியோர் ஆக்கிரமிப்பை எதிர்த்தும், ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியும் ஆவேச உரையாற்றினர்.

✱ ஜூலை 20ந் தேதியன்று காலை கட்டபொம்மன் சிலையிலிருந்து இந்திய கொலை வெறி ராணுவத்தைத் திரும்பப் பெறக் கோரி புறப்பட்ட ஊர்வலம் தலைமை அஞ்சல் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு விண்முட்டும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இறுதியில் ம.க.இ.க இணை செயலர் தோழர் கதிரவனும், வி.வி.மு. தோழர் இராமசாமியும் உரையாற்றினர். ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

✱ மதுரை மாவட்டம், தேனி புதிய ஜனநாயக வாசகர் வட்டம் ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிராக சுவரெழுத்து, சுவரொட்டி, பிரசுரம் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. தேனி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் இந்த இயக்கத்துக்காக வசூல் செய்தபோது, வறட்சியின் நடுவேயும் மக்கள் தம்மால் இயன்ற நிதியுதவி அளித்து ஆதரித்தனர். ஜூலை 21 அன்று மாலை அல்லிநகரத்திலிருந்து எழுச்சிமிகு ஊர்வலம் நடத்தப்பட்டது. "சிங்கள ராணுவம் கொன்ற போது அன்று எம்.எல்.ஏ பதவியைத் துறந்த கருணாநிதியே, இன்று இந்திய ராணுவம் தமிழனைக் கொல்லும் போது முதல்வர் பதவியைத் துறப்பாயா?" என்று கழகங்களையும், போலிக் கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தியும் எடுப்பான முழக்கங்களுடன் முக்கிய வீதிகளின் வழியே சென்ற ஊர்வலம் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

✱ பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வி.வி.மு தோழர்கள் மோகன், ராமசாமி ஆகியோரும், ம.க.இ.க இணை செயலர் தோழர் கதிரவனும் சிறப்புரையாற்றினர். உசிலை, உத்தமபாளையம் வி.வி.மு தோழர்களும், கம்பம் புதிய ஜனநாயக வாசகர் வட்டத் தோழர்களும் மதுரை ம.க.இ.க தோழர்களும் புரட்சிகர இசை நிகழ்ச்சி நடத்தினர். ம.க.இ.க. மதுரையைச் சேர்ந்த தோழர் சுகுணா, இந்திய ராணுவ அட்டூழியங்களை "கோடை மழை போல குண்டுகள் விழுந்திட..." என பாடலாகப் பாடியபோது, அது உள்ளத்தைத் தொடுவதாக அமைந்து மக்களிடம் வரவேற்பைப் பெற்றது.

## மே.வங்கம்: கிரிமினல்களின் பாசறை



ரௌடித்தனத்துக்கும் அராஜகத்துக்கும் பேர்போன காங்கிரசின் குண்டாந்தடி ஆட்சிக்கு சரியான மாற்று நாங்கள்தான் என்று மார்தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த 'மார்க்சிஸ்டு'கள், ஒரு தலைமுறைக்குள்ளாகவே தங்களை ஒரு குண்டர்படை கட்சி என்பதை நிரூபித்துக் கொண்டு, மே.வங்கத்தைக் கொலைக்களமாக மாற்றிவிட்டார்கள்.

மே.வங்கத்தில் தினசரி 50 குண்டுகள் வெடிக்கின்றன. குறைந்தது 10-20 பேராவது தினமும் படுகாயமடைகின்றனர். கல்கத்தா புறநகர் பகுதியில் இடிந்த கூரைகளும், உடைந்த சுவர்களும் இதற்கு சாட்சியாக நிற்கின்றன.

சணல் கயிறு சுற்றப்பட்ட நாட்டு வெடிகுண்டுகளும் அமிலம் நிரப்பப்பட்ட கண்ணாடி சீசா குண்டுகளும் இப்போது சர்வசாதாரணமாக அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்கான ஆயுதங்களாக மாறிவிட்டன. மாநிலத்தின் அங்கீகரிக்கப்படாத பெரிய குடிசைத்தொழிலாக - வியாபாரமாக இது வளர்ந்து விட்டது. கடந்த மாதத்தில் மத்திய கல்கத்தா பகுதியில் மட்டும் 500க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்துள்ளன. ஆனாலும் போலீசின் அரசு இதைக் கண்டு கொள்வதில்லை.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைப் பரிசோதிக்க உரிய இரசாயனப் பரிசோதனைச்சாலை மாநிலத்தில் இல்லாததால் குற்றப்பத்திரிக்கை தயாரிக்க முடியவில்லை என்று கையைப் பிசைகிறது மாநில போலீசு. 90 நாட்களுக்குள் போலீசு அறிக்கை தராவிட்டால் கோர்ட்டுகள் கைதிகளை விடுவிக்க வேண்டும். இதைச் சாதகமாக்கிக் கொண்டு ரௌடிகளும் கிரிமினல்களும் தமது தொழிலைப் பெருக்கிக்கொண்டு போலீசாருக்கு சவால் விடும் அளவுக்கு முன்னேறி விட்டனர்.

கடந்த ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் ஒரு குப்பைத்தொட்டியிலிருந்த குண்டை, பந்து என்று நினைத்து விளையாடிய இரு குழந்தைகள் குண்டு வெடித்து மாண்டன. குப்பையிலிருந்த ஒரு தகர டப்பாவை எடுத்து அமுத்திப் பார்த்த ஒரு நகரசுத்தி தொழிலாளி அதிலிருந்த குண்டு வெடித்து மாண்டார். இன்னும் பள்ளி விளையாட்டுத் திடலிலும், அலிப்பூர் அரசு கருவூல வளாகத்திலும் கூட குண்டுகள் வெடித்துள்ளன.

குண்டு தயாரிக்கும் குண்டர்கள் 'மார்க்சிஸ்டு' கட்சியின் தொண்டர்கள் என்பது ஊரறிந்த கதை. கடந்த மாதத்தில் 24 பர்கானாவிலுள்ள தாக்குர்புரில் ரகசியமாக ஆயுதங்களைத் தயாரித்து வந்த ஒரு கும்பலை போலீசார் கைது செய்தனர். உடனே 'மார்க்சிஸ்டுகள்' அவர்களை விடுவிக்குமாறு போலீசை மிரட்டியதால், பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதுபோதாது என்று இப்போது வழக்கையே கைவிடுமாறு நிர்ப்பந்திக்கின்றனர். இதுபற்றி கட்சி நாளேடான 'ஜனசக்தி'யில் விளக்கக் கட்டுரை வெளியிட்டு, போலீசார் கையூட்டு பெற்றுக்கொண்டு அப்பாவிகளைக் கைது செய்ததாகவும், அதற்கு எதிராக தாங்கள் போராடுவதாகவும் புதிய கதையை அவிழ்த்துவிட்டு, மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கு - அமைதியைக் காப்பவர்களாக சதிராடுகின்றனர். ஆட்சியதிகாரத்தில் இருக்கும் ஆணவத்தால் ரௌடியிசத்தைக் கொள்கையாகவும், குண்டர்களை கட்சியின் தொண்டர்களாகவும் கொண்டு மாநிலத்தையே கொலைக்களமாக மாற்றிவிட்ட 'மார்க்சிஸ்டுகள்', உண்மையிலேயே காங்கிரசுக்கு தேசிய 'மாற்று' என்பதை நிரூபித்து விட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்!

படிப்பகம்

www.padippakam.com
R.N. 42648/85
Regd.No.TN/MS(S) 344



# இதுதான் இளைய இந்தியா

ராகுல்காந்தி: இந்திய மக்கள் ஏமாந்தால், அடுத்து இந்திய நாட்டின் பிரதமராக அரியணை ஏறத் தயாராயிருக்கும் நேருவின் கொள்ளுப்பேரன். ராஜீவ் காந்தியின் வாரிசு. அப்பனைவிட ஒருபடி அதிகமான அறிவு சூன்யம்! இருந்தாலும் பிரதமரின் மகனல்லவா? உடம்பெல்லாம் மூளை இருக்கும் மகா அறிவாளி இவர் என்று எதிர்வரும் தலைமுறையை ஏமாற்ற வேண்டுமே! எப்படி? மதிப்புமிக்க டில்லி செயின்ட் ஸ்டீபன் கல்லூரி மாணவனாகி விட்டார்.

90 சதவிகிதத்திற்கும் அதிக மதிப்பெண் பெற்றவர்கள்கூட அங்கு நுழைவுத் தேர்வுக்கே தகுதியில்லையென திருப்பப்படும் போது பள்ளி இறுதி வகுப்பில் 61 சதவிகிதம் மட்டுமே பெற்ற ராகுல், கம்பீரமாக இப்போது அங்கு வரலாறு 'ஹானர்ஸ்' பட்டம் படிக்கிறார்! குறிபார்த்து துப்பாக்கி சுடுவதில் ராகுல் இணையற்றவர் என்பதால் "விளையாட்டு" கோட்டாவில் அவருக்கு 'சீட்டு' கிடைத்தது என்கிறார்கள்! நான்கு பேர் சேர்ந்து விளையாடும் விளையாட்டு என்றால் குட்டு உடைந்துவிடும் அல்லவா!

எனவே போலி ஆதாரங்களுக்குப் பெயர் போன ராஜீவ் தம் மகனுக்கு விளையாட்டு சான்றிதழையும் அந்த முறையில் வாங்கி விட்டார். தேசீய துப்பாக்கி சுடும் பயிற்சிக் கழகமும், இந்திய ஒலிம்பிக் தேர்வு சம்மேளனமும் ராகுல் 'துப்பாக்கி குறி தப்பாது' என்பதற்கு சான்றிதழ் வழங்கியிருக்கின்றன. அப்படியே பார்த்தாலும் சிறப்பு விளையாட்டுத் தகுதிக்கு 10 சதவிகிதம் தான் கூடுதல் மதிப்பெண். எனவே மொத்தம் 71 சதவிகிதம்.

ஆனால் 75 சதவிகிதம் என்பது அக்கல்லூரியின் குறைந்தபட்ச மதிப்புதகுதி! இருப்பினும் தீவிரவாதிகளின் குறியிலிருந்து பிரதமர் மகன் தப்பிக்க ராகுலுக்கு அக்கல்லூரியின் சார்பாக வீட்டிலேயே பாடம் கற்றுத்தர ஏற்பாடு நடக்கிறது

இதோ, கால்கடுக்க வரிசையில் நின்றுகொண்டிருக்கும் இவர்கள், முதல்தர மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்

இந்தியாவில் மொத்தம் உள்ள 15,498 உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து சென்ற ஆண்டு பள்ளியிறுதி வகுப்பு தேறியவர்களின் எண்ணிக்கை, 34.4 லட்சம்! இந்தியாவிலுள்ள மொத்த தொழில்நுட்ப, மருத்துவ, கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 6,597ல் 28.47 லட்சம் மாணவர்கள் மட்டுமே சேர முடியும்! மீதி 5.93 லட்சம் மாணவர்கள் விரும்பினாலும் பட்டம் படிக்க முடியாது டில்லி கிரோரிமால் கல்லூரியின் 500 காலி இடங்களுக்கு 30,000 விண்ணப்பமும், பெங்களூர் நேஷனல் கல்லூரியின் 250 அறிவியல் பட்டப்படிப்பு காலி இடங்களுக்கு 6000 விண்ணப்பங்களும் சென்னை கிருத்துவ கல்லூரியில் 40 வணிகவியல் காலியிடங்களுக்கு 6000 விண்ணப்பங்களும் வந்துள்ளது. பல கல்லூரிகள், 75 சதவிகிதத்திற்கும் குறைவாக மதிப்பெண் பெற்றவர்களுக்கு விண்ணப்பமே கொடுப்பதில்லை! 92 சதவிகிதம் பெற்றும்கூட பல ஏழை, நடுத்தர மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல் படிப்புக்கு வழியில்லை!

பிரதமர் மகன் மரமண்டையாக இருந்தாலும் மதிப்புமிக்க கல்லூரிகளில் கௌரவமான பட்டங்கள் பெற ஏற்பாடு! சாமான்ய மக்களின் பிள்ளைகள் விழுந்து விழுந்து படித்து மதிப்பெண் பெற்றிருந்தாலும், விரும்பியதைத் தேர்ந்தெடுத்து படிக்க வழியில்லை! கல்வி அறிவுக்கு இழைக்கப்படும் இந்த அவமானத்தை நாம் துடைத்தொழிப்பது எப்போது?



படிப்பகம்